தினமணி

**மழை பாதித்த தோட்டக்கலை பயிர்களைப் பாதுகாக்க...**

First Published : 23 Dec 2010 12:00:00 AM IST



வடகிழக்குப் பருவ மழையால் சேதம் அடைந்த தோட்டக்கலைப் பயிர்களைப் பார்வையிடும் வேளாண் விஞ்ஞானிகள்.

கடலூர்: கடலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களைப் பாதுகாக்க, வேளாண் துறை பரிந்துரைகளை அறிவித்துள்ளது.

இதுகுறித்து தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் ஜெ.மல்லிகா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த வடகிழக்குப் பருவ மழையின் தாக்கத்தால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர்களை, தண்ணீர் சூழ்ந்து இருந்தது.

ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா.சுப்பிரமணியன் தலைமையில், வேளாண் விஞ்ஞானிகள் ந.செல்வராஜ், ப.அருள்செந்தில், வே.ரவிச்சந்திரன், பா.இந்திராகாந்தி, வெ.தனுஷ்கோடி ஆகியோர் அடங்கிய குழு, பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தது.

தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் ஆர்.கனகசபை, ஜெ.மல்லிகா, அமிர்தலிங்கம் ஆகியோர் இணைந்து ஆய்வை மேற்கொண்டனர்.

கன்னித்தமிழ்நாடு, வெங்கடாம்பேட்டை, ஆயிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் கத்தரி, பாகல், புடல், அவரை, மரவள்ளி ஆகிய பயிர்களையும், வணிகப் பயிர்களான குண்டுமல்லி,

காக்கட்டான், கனகாம்பரம் உள்ளிட்ட பயிர்களையும் ஆய்வு செய்து கீழ்காணும் பரிந்துரைகளை அளித்தனர்.

நீர் வடிகட்டுதல்: வடிகால் வசதியை அதிகப்படுத்தி, வரிசைக்கு இடையில் வாய்க்கால் உண்டாக்கி, நீரை வடிக்க வேண்டும்.

உரமிடுதல்: மண்ணை நன்றாகக் கொத்தி, உலர்த்தியபின், தேவையான உரமிட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அவரையில் ஒரு குழிக்கு 22 கிராம் யூரியா இட்டு மண்ணை மூடவேண்டும்.

குண்டு மல்லிப் பயிரைக் கவாத்து செய்து, செடிக்கு 5 கிலோ தொழுஉரம், 65 கிராம் யூரியா, 375 கிராம் சூப்பர் பாஸ்பேட், 100 கிராம் மியூரேட் ஆப் பொட்டாஷ், உரங்களையிட்டு மண் அணைக்க வேண்டும்.

வளர்ச்சி ஊக்கிகள்: கத்தரியில் ஒரு லிட்டர் நீருக்கு, டிரைக்கோடானால் 2 பிபிஎம் மற்றும் சோடியம் போரேட் அல்லது போரக்ஸ் 35 மில்லிகிராம், என்ற அளவில் கலந்து, பூக்கள் தோன்றும் பருவத்தில் தெளிப்பான் மூலம் தெளித்து, மகசூலை அதிகரிக்கலாம்.

பயிர் பாதுகாப்பு: கத்தரியில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும். குண்டு மல்லி, காக்கட்டான் போன்ற பயிர்களுக்கு, வாடல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு எமிசான் ஒரு கிராம் வீதம் கலந்து செடிகளைச் சுற்றி வேர் பாகத்தில் ஊற்ற வேண்டும்.

இலைப்புள்ளி நோய்: இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த மேங்கோசிப் பூஞ்சாண் கொல்லியை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும் என செய்திக்குக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு அங்காடிகளில் வெங்காய விற்பனை: கிலோவுக்கு ரூ.15 குறைவு**

First Published : 23 Dec 2010 03:30:48 AM IST



திருவல்லிக்கேணி பெரிய தெருவில் உள்ள காமதேனு சிறப்பு அங்காடியில் வெங்காயம் வாங்க புதன்கிழமை வரிசையில் நிற்கும் பொதுமக்கள்.

சென்னை, டிச. 22: சென்னை நகரில் உள்ள கூட்டுறவு அங்காடிகளில் தமிழக அரசு சார்பில் மலிவு விலையில் வெங்காயம் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

21 அமுதம் அங்காடிகள் உள்பட 125-க்கும் மேற்பட்ட கூட்டுறவு அங்காடிகளில் வெங்காயம் கிடைக்குமென தமிழக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சென்னை போன்ற பெருநகரங்களில் மொத்த விலைக் கடைகளில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.60 வரை விற்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், கூட்டுறவுக் கடைகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

சென்னையில் ராயப்பேட்டை, திருவல்லிக்கேணி, தேனாம்பேட்டை, அசோக்நகர், பெசன்ட் நகர், ஷெனாய் நகர், பெரியார் நகர், கீழ்ப்பாக்கம், நுங்கம்பாக்கம், ராஜா அண்ணாமலை புரம் ஆகிய இடங்களில் உள்ள காமதேனு சிறப்பு அங்காடிகளிலும் வெங்காயம் கிடைக்கும்.

அமுதம் கடைகள் எங்கெங்கே? அண்ணா நகர், அண்ணா நகர் மேற்கு, சாந்தி காலனி,

ஆவடி, பெரியார் நகர், எம்.எம்.டி.ஏ. காலனி, சின்மயா நகர், நந்தனம், தாம்பரம், அசோக் நகர், கே.கே.நகர் மேற்கு, கீழ்ப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைமை அலுவலகம், போரூர், அண்ணா நெடும்பாதை, ஆர்காடு சாலை, ராமகிருஷ்ண மடம் சாலை, வி.எம்.தெரு (ராயப்பேட்டை), கோபாலபுரம், சி.பி.ஆர். சாலை (ஆழ்வார்பேட்டை), இந்திரா நகர் (அடையார்), திருவான்மியூர் ஆகிய 21 இடங்களில் உள்ள அமுதம் அங்காடிகள் வெங்காயம் கிடைக்கும்.

விலை என்ன? சாம்பார் வெங்காயம் ஒரு கிலோ ரூ.35-க்கும், நாசிக் வெங்காயம் கிலோ ரூ.55-க்கும், நடுத்தர அளவிலான வெங்காயம் கிலோ ரூ.45-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதே ஒரு கிலோ வெங்காயம் வெளிச்சந்தையில் ரூ.60 முதல் ரூ.70 வரை விற்கப்பட்டதாக காமதேனு சிறப்பு அங்காடியைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

காமதேனு சிறப்பு அங்காடிகளின் விற்பனைக்காக நாளொன்றுக்கு 10 ஆயிரம் கிலோ வெங்காயம் கொள்முதல் செய்யப்படுவதாகவும் அவை அனைத்தும் ஒரே நாளில் விற்றுத் தீர்த்து விடுவதாகவும் அதிகாரிகள் கூறினர்.

அமுதம் அங்காடிகள், காமதேனு சிறப்பு அங்காடிகளைத் தவிர்த்து காஞ்சிபுரம் மொத்த விற்பனை பண்டகசாலை, சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி, வட சென்னை மொத்த விற்பனை நிலையம் ஆகியன சென்னையில் தலா 25 உள்ளன.

அவற்றிலும் வெங்காயத்தை விற்பனை செய்ய அரசு முடிவெடுத்து அதற்கான கொள்முதலைத் தொடங்கி விட்டது. இதைத் தொடர்ந்து, வியாழக்கிழமை முதல் அந்தக் கடைகளில் வெங்காயம் கிடைக்கும் என அரசுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**துவரையை தனிப்பயிராக செய்தால் லாபம் பெறலாம்: வேளாண்மை அதிகாரிகள்**

First Published : 23 Dec 2010 12:00:00 AM IST



துவரை

காஞ்சிபுரம்: நாளுக்கு நாள் துவரம் பருப்பின் விலை தொடர்ந்து உயர்ந்து வரும் சூழ்நிலையில் விவசாயிகள் துவரைச் சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம். தற்போதுள்ள பருவம் துவரைச் சாகுபடிக்கு ஏற்ற பருவம் என்று வேளாண்மை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் துவரையை பெரும்பாலும் மணிலாவில் ஊடுபயிராக பயிர் செய்கின்றனர். மணிலாவில் செலுத்தும் கவனம் ஊடுபயிராக செய்யும் துவரையில் செலுத்தாததால், துவரை சரியாக விளைவதில்லை என்ற எண்ணம் விவசாயிகள் மத்தியில் தவறாக ஏற்பட்டுள்ளது.

மேலும் துவரையை 5 மாதம் முதல் 6 மாதம் வரை வளர்க்க வேண்டும் என்ற கருத்தும் விவசாயிகள் மத்தியில் உள்ளது.

தற்போது 120 நாள்களில் (4 மாதம்) விளையக் கூடிய துவரை ரகங்கள் எல்லாம் வந்துள்ளன. வம்பன்-4, ஏபிகே 1, ஐபிசிஎல் போன்ற ரகங்கள் 120 நாள்களில் விளைந்து பயன்தரக் கூடியவை.

துவரைப் பயிர் செய்வதன் மூலம் ஏக்கருக்கு 600 கிலோ வரை அறுவடை செய்ய முடியும். ஒரு கிலோ ரூ. 80-க்கு விற்றால் கூட ரூ. 48 ஆயிரம் வருமானம் கிடைக்கும்.

இந்த துவரை உற்பத்தி செய்ய, 10 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். செலவுகள் ஏக்கருக்கு ரூ. 4 ஆயிரம் மட்டுமே ஆகும்.

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறு வகை, பயிர்கள் உற்பத்தி செய்ய வேளாண் துறை மூலம் மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் ஜிப்சம், நுண்ணூட்டச்சத்து, ஸ்பிரேயர் மற்றும் தேவையான மருந்துகளை 50 சதவீத மானியத்திலும் துவரை சாகுபடி செய்வதற்கு பெற்றுக் கொள்ளலாம்.

இது குறித்து காஞ்சிபுரம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த வேளாண்மை உதவி அலுவலர்கள் கூறுகையில், "வேலூர் மாவட்டத்தில் சில கிராமங்களில் ஒட்டுமொத்தமாக 1500 ஏக்கரில் துவரை பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

அவர்கள் ஏக்கருக்கு ரூ. 54 ஆயிரம் வரை லாபம் சம்பாதிக்கின்றனர். அதுபோல் இங்கு துவரையை தனிப் பயிராக பயிர் செய்தால் விவசாயிகள் கூடுதல் லாபம் சம்பாதிக்கலாம். ÷மேலும் துவரைப் பயிர் செய்வதன் மூலம் மண்ணின் வளமும் பாதுகாக்கப்படும். துவரைப் பயிர்

செய்வதற்கான மானிய உதவிகளை பெற அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொள்ளலாம்' என்றனர்.

**இயற்கை வழியில் வேளாண் நிலக்கடலை உற்பத்தி**

First Published : 23 Dec 2010 12:00:00 AM IST

திருவள்ளூர்: ரசாயன உரங்களையே பயன்படுத்தி நிலக்கடலை உற்பத்தி செய்வதைவிட விவசாயிகள் இயற்கை வழி வேளாண் மூலம் சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறமுடியும் என திரூர் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கோ.வி.ராமசுப்பிரமணியன் தெரிவித்தார்.

தற்போதுள்ள காலகட்டத்தில் மண் வளத்தைக் காக்கும் பொருட்டு விவசாயத்தில் இயற்கை உரங்களை பயன்படுத்துவதே சிறந்ததாகும். தற்போது இயற்கை வேளாண் வழியில் நிலக்கடலை உற்பத்தியில் அதிக மகசூல் பெறமுடியும் என திரூர் நெல் அறிவியல் நிலையத்தில் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சாகுபடி முறை: செம்மண் மற்றும் கருமை கலந்த மண்ணில், கோ 3, கோ 4, டிஎஸ்ஆர் 1, ஏஎல்ஆர் 3, விஆர்ஐ 2, டிஎம்பி 2, டிஎம்வி 7 ஆகிய ரகங்களை பயிரிடலாம்.

இதன் பருவகாலங்கள்: ஏப்ரல், மே, ஜூன், ஆகஸ்ட், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்கள் இதன் பருவ காலங்கள் ஆகும். விதையின் பரிமாணத்தையும் இடத்தையும் பொறுத்து ஒரு ஹெக்டேருக்கு 100 கிலோ வீதம் பயிரிடலாம்.

மண்பாங்கான நிலத்துக்கு 15-க்கு 15 செ.மீ. என்ற முறையிலும், சாதாரண நிலத்தில் 30-க்கு 10 செ.மீ. என்ற இடைவெளியில் பயிரிட வேண்டும். தொடிப்புழுதி உண்டாகும் வரை நன்கு உழவு செய்ய வேண்டும். இறுதி உழவுக்குப் பின்னர் ஒரு ஹெக்டேருக்கு 25 டன் தொழு உரம் இடவேண்டும். விதைத்த 45 நாள்கள் கழித்து 400 கிலோ ஜிப்சம் உரமாக இடவேண்டும்.

நீர்ப்பாசன முறை: விதைப்புக்கு பிறகு உடனடியாக நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அதை தொடர்ந்து 5-ம் நாள்களுக்குப் பிறகு 2-ம் பாசனம், பூக்கும் பருவமான 20 நாளுக்குப் பின்னர் 3-ம் பாசனம், அதைத் தொடர்ந்து 30 நாள்களுக்குப் பின்னர் 4-ம் பாசனம் செய்ய வேண்டும்.

40 நாள்கள் கழித்து வேர் முளை விடும் பருவத்திலும், 50 நாள்கள் கழித்து ஒருமுறையும் பாசனம் செய்ய வேண்டும். இதையடுத்து காய் பிடிக்கும் பருவமான 60-ம் நாள், அதை தொடர்ந்து 70, 80 என 110 நாள்கள் வரை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். விதைப்பிற்கு 110 நாள்கள் கழித்து அறுவடை காலமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேர் அழுகல் நோய்: வேர் அழுகல் நோயை தடுக்க விதைத்த 30 நாள்களுக்குப் பின்னர் 50 கிலோ தொழு உரம், 50 கிலோ மணல் ஆகியவற்றுடன் பி.எப். பொருளை கலந்து உரமாக இட வேண்டும்.

அறுவடை: சரியான நேரத்தில் போதுமான ஈரம் மண்ணில் இருக்கும் போது அறுவடை செய்ய வேண்டும். அறுவடைக்குப் பின்னர் நீண்ட நாள்களுக்கு நிலக்கடலை கொடியை வயலில் விடக் கூடாது. அதிகமான சூரிய வெளிச்சத்தில் நிலக்கடலையை காய வைக்க கூடாது. தரையில் இருக்கிற ஈரம் தாக்காதவாறு தரையின் மேல் பரப்பில் வறண்ட மணலைப் பரப்பி அதன் மேல் நிலக்கடலை மூட்டைகளை அடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் விதை முளைக்கும் திறனையும், கால அளவையும் அதிகரிக்கச் செய்யும்.

இதுபோன்ற முறையில் நிலக்கடலை பயிரிட்டால் விவசாயிகள் அதிக மகசூல் மூலம் பயனடையலாம்.

இதுகுறித்து மேலும் விவரங்கள் தேவைப்பட்டால் திரூர் நெல் அறிவியல் நிலையத்தில் உழவியல் பேராசிரியர் முரளிதரன், உதவிப் பேராசிரியர் மணிமேகலை ஆகியோரை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என திரூர் நெல் அறிவியல் மையத் தலைவர் கோ.வி.ராமசுப்பிரமணியன் தெரிவித்தார்.

**வெங்காய இறக்குமதிக்கு வரி ரத்து: மத்திய அரசு**

First Published : 23 Dec 2010 12:18:00 AM IST



புது தில்லி, டிச.22: வெங்காயத்தின் மீது விதிக்கப்படும் இறக்குமதி வரியை மத்திய அரசு முற்றிலுமாக நீக்கியுள்ளது. கடந்த சில நாள்களாக வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 80 ஆக விற்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு வெங்காயத்தின் மீதான இறக்குமதி வரியை ரத்து செய்துள்ளது.

ஏற்கெனவே வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இப்போது அடுத்தகட்டமாக இறக்குமதியை ஊக்குவிக்கும் நோக்கில் சுங்க வரி ரத்து செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. வெங்காயத்துக்கு 5 சதவீத சுங்கவரி விதிக்கப்பட்டு வந்தது. இப்போது அது முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக நிதித்துறைச் செயலர் அசோக் சாவ்லா தெரிவித்தார்.

நாடு முழுவதும் வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்தது. நாட்டின் வட மாநிலங்களில் பெய்த கன மழை காரணமாக வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் கிலோ வெங்காயம் ரூ. 30 என்றிருந்த நிலை மாறி கிலோ ரூ. 80 வரை உயர்ந்துள்ளது.

நாட்டிலேயே மகாராஷ்டிரம், குஜராத்தில்தான் பெருமளவில் வெங்காய சாகுபடி செய்யப்படுகிறது. தென் மாநிலங்களில் சில பகுதிகளில் கணிசமான அளவில் வெங்காயம் பயிரிடப்படுகிறது. வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனக் கருதி சில பதுக்கல்பேர்வழிகள் வெங்காயத்தைப் பதுக்கியதும் இதற்கு முக்கியக் காரணமாகும். வெங்காய விலை உயர்ந்ததைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு ஜனவரி 15-ம் தேதி வரை வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இப்போது உயர்ந்துள்ள விலை குறைய குறைந்தபட்சம் மூன்று வாரங்களாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வெங்காய வரத்தை அதிகரிக்கும் நோக்கில் இப்போது இறக்குமதிக்கு விதிக்கப்படும் சுங்க வரியும் ரத்து செய்யப்பட்டுள்ளது. வெங்காய விலையைக் குறைப்பதற்காக இறக்குமதி செய்யும் நோக்கம் அரசுக்கு இல்லை என்று ஏற்கெனவே மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார். இந்நிலையில் பாகிஸ்தானிலிருந்து 450 டன் வெங்காயம் பஞ்சாப் எல்லை வழியாக இந்தியாவுக்கு வந்துள்ளது. பாகிஸ்தானிலிருந்து ஒரு கிலோ வெங்காயம் ரூ. 18 முதல் ரூ. 20 விலையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**கடனில் தள்ளாடும் கூட்டுறவு தேயிலை ஆலைகள்: விவசாயிகளுக்கு பல கோடி இழப்பு**

டி.வீ.ஆர். சாமி

First Published : 23 Dec 2010 03:20:09 AM IST



மஞ்சூர் : கூட்டுறவுத் தேயிலை ஆலைகள் சுமார் 25 கோடி கடனில் சிக்கியிருப்பதால், தேயிலை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உரிய விலை கொடுக்க முடிவதில்லை. இதனால் உறுப்பினர்களுக்கு பல ஆண்டுகளாக பலகோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

÷நீலகிரி மாவட்டத்தில் பிரதான விவசாயத் தொழிலான தேயிலை விவசாயத்தில் 75 சதவீத மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் பெரும்பாலனவர்கள் சிறு, குறு விவசாயிகள். தேயிலை விவசாயிகளின் நலன் கருதி மாவட்டத்தில் 15 கூட்டுறவுத் தேயிலை ஆலைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் தேயிலை ஆலைகளும் செயல்படுகின்றன.

÷கூட்டுறவு ஆலைகளில் சுமார் 20 ஆயிரம் விவசாயிகள் அங்கத்தினர்களாக சேர்ந்து பசுந்தேயிலை விநியோகம் செய்கின்றனர். அங்கத்தினர்களிடம் வாங்கும் பசுந்தேயிலைக்கு, மாதந்தோறும் விற்பனையாகும் தேயிலையைக் கணக்கிட்டு, நிர்வாகச் செலவுகளைக் கழித்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. பசுந்தேயிலை விலை நிர்ணயத்தில் தனியார் ஆலைகளை விட கூட்டுறவு ஆலைகளில் சுமார் 3 முதல் 6 வரை குறைவாகவே வழங்கப்படுகிறது.

÷இதனால் கூட்டுறவு ஆலைகளில் தேயிலை விநியோகம் செய்யும் விவசாயிகளுக்கு பல கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு ஆலைகளின் நிர்வாகச் செலவுகள், அங்கத்தினர்கள் பெற்றுள்ள கடன்கள் போன்றவையே தனியார் ஆலைகளுக்கு இணையாக விலை கொடுக்க முடியாததற்கு காரணமாகக் கூறப்படுகிறது.

÷இருப்பினும், கூட்டுறவு ஆலை நிர்வாகிகளிடம் திறமை இல்லாததே பசுந்தேயிலைக்கு தனியார் ஆலைகளைப் போல் விலை கொடுக்க முடிவதில்லை என்று அங்கத்தினர்கள் புகார் கூறுகின்றனர்.

÷இது குறித்து நீலகிரி மாவட்ட இண்ட்கோ அங்கத்தினர்கள் நலச் சங்கத் தலைவர் டி.பி.ராமன் கூறியது:

÷தனியார் தொழில் அதிபர்களின் ஆதிக்கத்திலிருந்து தேயிலை விவசாயிகளை காக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், கூட்டுறவு ஆலைகள் தொடங்கப்பட்டன. ஆனால், தனியார் ஆலைகளை விடக் கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலைக்கு குறைந்த விலை கொடுப்பதால், விவசாயிகளுக்கு பல ஆண்டுகளாக பலகோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. கூட்டுறவு ஆலைகளில் அரசாங்கத்தின் நிதி பங்களிப்பு 51 சதவீதமுள்ளது.

÷இந்த பங்குத்தொகையை தவிர விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு எந்த நடவடிக்கையும் அரசு எடுப்பதில்லை. ஆலைகளை நிர்வகிக்கும் அதிகாரிகளை அரசு நியமிக்கிறது. ஆனால் அவர்களுக்கான மாத ஊதியத்தை அங்கத்தினர்கள் வழங்கவேண்டியுள்ளது.

÷அங்கத்தினர்களிடம் ஊதியம் பெறும் அதிகாரிகள் அவர்களின் தேயிலையை சந்தைப்படுத்த எவ்வித ஆக்கப் பூர்வமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. மேலும், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் | 7ஆயிரம் கோடி விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது.

÷ஆனால் கூட்டுறவு ஆலைகளில் கடன் பெற்றுள்ள சிறு, குறு விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப்படவில்லை. அதற்கான எந்த முயற்சியையும் அதிகாரிகள் எடுக்கவில்லை. இதனால் கூட்டுறவு ஆலைகள் தாய்கோ வங்கியில் பெற்ற கடனுக்கு இன்று வரை பல லட்சம் ரூபாய் வட்டியை மட்டும் கட்டி வருகிறது.

÷இதனால் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு ஆலைகள் சுமார் 25 கோடி கடனில் தத்தளித்து வருகிறது. இதனால் பசுந்தேயிலைக்கு உரிய விலைகிடைக்காமல் போகிறது.எனவே, கூட்டுறவு தேயிலை ஆலைகளை நிர்வகிக்கும் அரசு அதிகாரிகளுக்கு அரசே மாத ஊதியம் வழங்க வேண்டும், தேயிலை விவசாயிகள் ஆலையில் பெற்றுள்ள கடன்களை தள்ளுபடி செய்து தேயிலை ஆலைகளுக்கு புத்துயிர் ஊட்டவேண்டும். அப்போதுதான் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்கும் என்றார்.

**மழை பாதித்த தோட்டக்கலை பயிர்களைப் பாதுகாக்க... மன்மோகன் உறுதி**

First Published : 23 Dec 2010 12:05:00 AM IST



ஆந்திர மாநிலத்தில் விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்கக் கோரி எதிர்க்கட்சிகள் சார்பில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து கோரிக்கை மனு அளித்த பின்னர் செய்த

புதுதில்லி, டிச. 22: ஆந்திரத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது தடுக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்தார்.

ஆந்திர மாநிலத்தில் மழை, வெள்ளம் போன்ற இயற்கை பேரிடரால் ஏராளமான விவசாயிகள் பெருத்த நஷ்டமடைந்துள்ளனர். இவ்வாறு நஷ்டமடைந்த விவசாயிகள் சிலர் தற்கொலை செய்து கொண்டனர்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரி சாகும் வரை உண்ணாரவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார் தெலுங்கு தேச கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு.

காங்கிரஸில் இருந்து விலகிய கடப்பா முன்னாள் எம்.பி.யும் ராஜசேகர ரெட்டியின் மகனுமான ஜெகன் மோகன் ரெட்டியும் உண்ணாவிரதம் இருந்தார்.

இதற்கிடையே ஆந்திரத்தில் விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பிரதமர் மன்மோகன் சிங்கை புதன்கிழமை சந்தித்தனர். நஷ்டம் காரணமாக இதுவரை 137 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர் என்று குழுவில் இடம் பெற்ற பிரதிநிதிகள் பிரதமரிடம் தெரிவித்தனர்.

வெள்ளச் சேதத்துக்கு நிவாரண முன் தொகையாக ரூ. 400 கோடியை மத்திய அரசு அறிவித்துள்ளது. இது போதாது என்றும் அவர்கள் பிரதமரிடம் எடுத்துக் கூறினர்.

"மத்தியக் குழு ஆந்திரத்தில் பார்வையிட்டு வருகிறது. சேத மதிப்பு குறித்து அந்தக் குழு அறிக்கை அளித்தவுடன் என்ன மாதிரியான இழப்பீடு வழங்குவது என்பதை முடிவு செய்வோம் என்று எதிர்க்கட்சி பிரதிநிதிகளிடம் மன்மோகன் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் இந்தக் குழுவினர் செய்தியாளர்களைச் சந்தித்தனர். நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வழங்க வேண்டும், மற்ற பயிர்களுக்கு ரூ. 15 ஆயிரம் வழங்க வேண்டும என்று பிரதமரிடம் கூறினோம் என்று கூறினார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் ஏ.பி. பரதன்.

எதிர்க்கட்சி குழுவில் தெலுங்கு தேசம், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், ராஷ்ட்ரீய லோக்தளம், இந்திய தேசிய லோக்தளம், அதிமுக, மதிமுக, மதச்சார்பற்ற ஜனதாதளம் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர்.

தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வரும் தெலுங்குதேச தலைவர் சந்திரபாபு நாயுடுவுக்கு தனது அனுதாபங்களைத் தெரிவிக்குமாறு எதிர்க்கட்சி பிரதிநிதிகளிடம் பிரதமர் கூறியதாக மார்க்சிஸ்ட் தலைவர் பிருந்தா காரத் தெரிவித்தார்.

**நெல் பயிரில் குலை நோய் தாக்குதல்: நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

First Published : 22 Dec 2010 11:38:28 AM IST

திருவாடானை, டிச. 21: திருவாடானை தாலுகா மங்களக்குடி பகுதியில் நெல் பயிரில் குலை நோய் தாக்குதல் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மங்களக்குடி பகுதிகளான ஆண்டாவூரணி, பனங்குளம், ஊரணிக்கோட்டை போன்ற பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதியில் பெரும்பாலான நெல் பயிர்களில் குலை நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக அரசு தனிக் கவனம் செலுத்தி, தக்க நிவாரணம் வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து பனங்குளம் ஊராட்சி மன்றத் தலைவி பிரேமா கருப்பையா கூறியது: இப்பகுதியில் அரசு பரிந்துரை செய்த பிபிடி 5204 (டீலக்ஸ் பொன்னி) நெல் விதைகளை பயன்படுத்தியுள்ளோம். தற்போது குலை நோய் தாக்குதல் ஏற்பட்டு, வேளாண் அதிகாரிகளின் அறிவுரையின்படி மருந்துகள் அடித்தும் பூச்சியை கட்டுப்படுத்த முடியவில்லை. பயிர்கள் முற்றிலும் அழிந்துவிட்டன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

எனவே அரசு தக்க நடவடிக்கை எடுத்து இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். இல்லையேல் மக்களைத் திரட்டி போராட்டம் நடத்துவோம் என்று தெரிவித்தார்.

நோய் தாக்குதலை கட்டுப்படுத்த

வேளாண் அதிகாரி யோசனை

திருவாடானை தாலுகாவில் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தொடர் மழை காரணமாக நெல் பயிரில் குலை நோய் தாக்குதல் தென்படுகிறது.

பிபிடி 5204 டீலக்ஸ் பொன்னி நெல் பயிரில் அதிகம் நோய் தாக்குதல் காணப்படுகிறது. அதனைக் கட்டுப்படுத்த துண்டுப் பிரசுரம் மூலமும், ஆட்டோக்களில் ஒலி பெருக்கி மூலமும் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

ஏக்கருக்கு டிரைக்சைக்ளோசோல் மருந்து 200 கிராம் என்ற அளவில் தெளித்து நோயை கட்டுப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கதிர் வெளி வந்திருந்தால் மாலை நேரத்தில்தான் மருந்து தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பானாக இருந்தால் 200 லிட்டர் தண்ணீரிலும், விசைத் தெளிப்பானாக இருந்தால் 60லிட்டர் தண்ணீரிலும் கலந்து தெளிக்க வேண்டும்.

நோய் பாதித்த இடங்களில் தழைச்சத்து உரங்களான யூரியா, அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் குளோரைடு இடக் கூடாது.

மேற்கண்ட முறைகளைக் கடைப்பிடித்து குலை நோயைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஆர்.எஸ். மங்கலம் வேளாண்மை உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வெங்காயம் விலை கடும் உயர்வு**

First Published : 22 Dec 2010 11:02:47 AM IST

ஒட்டன்சத்திரம், டிச. 21: ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட்டில் சின்ன வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 55-க்கு விற்பனையானது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள அத்திக்கோம்பை, அரசப்பிள்ளைபட்டி, காவேரியம்மாபட்டி, பெரியகோட்டை, விருப்பாச்சி, காப்பிலியபட்டி, கொசவபட்டி, தங்கச்சியம்மாபட்டி, கொல்லபட்டி, காளாஞ்சிபட்டி, அம்பிளிக்கை, மண்டவாடி, வாடிப்பட்டி, கே.கீரனூர் ஆகிய கிராமங்களில் சின்ன வெங்காயம் அதிக அளவு பயிர் செய்யப்படுகிறது.

தற்போது நடவு காலம் என்பதால், சின்ன வெங்காயத்துக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் சின்ன வெங்காயத்தை (நடவு காய்) அதிக விலை கொடுத்து வாங்கி நடவு செய்து வருகின்றனர்.

அதேபோல, காந்தி காய்கறி மார்க்கெட்டுக்கு வரும் வெங்காயத்தின் வரத்தும் குறைந்துவிட்டது. இதனால், ஒரு கிலோ சின்ன வெங்காயம் கிலோ 55 ரூபாய் வரைக்கும் விற்கப்பட்டது.

மகாராஷ்ட்ர மாநிலத்தில் இருந்து இறங்குமதி செய்யப்பட்ட பல்லாரி வெங்காயம் கிலோ ரூ. 55 முதல் 65 வரை விற்பனையானது. ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் இருந்து பல்லாரி வெங்காயம் அதிக அளவு கேரளத்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து, அம்பிளிக்கையைச் சேர்ந்த விவசாயி ஜானகிராமன் கூறியதாவது: தற்போது, சின்ன வெங்காயம் நடவு காலம் என்பதால் அதிக விலை கொடுத்து வாங்கி நடவு செய்து வருகிறோம். வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளதால், மத்திய அரசு ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. ஆனால், வெங்காய உற்பத்தி அதிகரிக்கும் போது ஏற்றுமதியை அதிகரிக்க, மத்திய அரசு அனுமதி கொடுப்பதில்லை. இதனால், விவசாயிகள் மிகுந்த நஷ்டம் அடைகின்றனர். எனவே, உற்பத்தி அதிகரிக்கும் போது ஏற்றுமதியையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்றார்.

**50% மானியத்தில் பூச்சி மருந்து விநியோகம்**

First Published : 22 Dec 2010 12:11:27 PM IST

சங்ககிரி, டிச.21: வேளாண் துறை மூலமாக 50 சதவீதம் மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்கப்படுவதாக சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.செந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி:

மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (பயறு), ஐசோபாம் (எண்ணெய்வித்து) திட்டம் மற்றும் தீவிரப்பருத்தி அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்களில் 50 சதவீதம் மானியத்தில் பயிர் பாதுகாப்புக்கு தேவைப்படும் பூச்சி மருந்துகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.பயறு வகைப்

பயரிக்ளைத் தாக்கும் பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்தப் பரிந்துரைக்கப்படும் பூச்சி மருந்துகளான மானாகுரோட்டாபாஸ், எண்டோசல்பான், டிரைஅசோபாஸ் மற்றும் மான்கோசெப் ஆகிய பூச்சி மருந்துகள் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் (பயறு) 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது.

மேலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் பருத்திப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கு தேவைப்படும் அசாடிராக்டின் எனப்படும் வேம்பு மருந்து ஆகியவை ஐசோபாம் (எண்ணெய்வித்து) திட்டம் மற்றும் தீவிரப்பருத்தி அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றின் கீழ் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது.

சங்ககிரி வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் சங்ககிரி மற்றும் தேவூர் வேளாண் விரிவாக்க மையங்களில் பூச்சி மருந்துகளைப் பெறலாம்.

**டிச.24-ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

First Published : 22 Dec 2010 12:12:43 PM IST

சேலம், டிச.21: சேலம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் 24-ம் தேதி காலை 10.30-க்கு புதிய ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும். விவசாயிகள், வேளாண்மை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை தெரிவிக்கலாம் என்று அரசு செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**நெல் பயிரில் நோய்கள் தாக்கி பெரும் பாதிப்பு: நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

First Published : 22 Dec 2010 11:39:34 AM IST

பரமக்குடி, டிச. 21: போகலூர் ஒன்றியத்தில் மஞ்சூர், பாண்டிக்கண்மாய் உள்பட பல்வேறு கிராமங்களில் நெல் பயிரில் செந்தாலை மற்றும் சூரை நோய் தாக்கியதால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இந்நோய் தாக்குதலை கணக்கீடு செய்து அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போகலூர் ஒன்றியத்துக்குள்பட்ட மஞ்சூர், பாண்டிக்கண்மாய், இலந்தக்குளம், டி.கருங்
குளம், தெய்வேந்திரநல்லூர், கீழக்கோட்டை உள்பட பல்வேறு கிராமங்களில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு செல்லப்பொன்னி, ஐ.ஆர்.20, ஆடுதுறை ஆகிய நெல் வகைகள் பயிர் செய்யப்பட்டுள்ளன.

தற்போது விளையும் நிலையில் உள்ள இப்பயிர்களை செந்தாலை, சூரை மற்றும் குலை நோய் தாக்கியுள்ளது. இந்நோய் தாக்குதல் குறித்து விவசாயிகள், மாவட்ட ஆட்சியரிடம் கடந்த 20 நாள்களுக்கு முன் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் தெரிவித்தனராம். ஆனால், இதுவரை வேளாண் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கே.ஜீவா, விவசாயி கே.தியாக ராஜன் ஆகியோர் கூறியது:

தற்போது பெய்த தொடர் மழையால் இந்நோய் தாக்குதல் நெல் பயிர் முழுதும் பரவியுள்ளது. இதனை தடுக்க மருந்துகள் அடித்தும் பலன் இல்லை. ஓர் ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம்.

இதனால் வருவாய்த் துறை மற்றும் வேளாண் துறையினர் அனைத்து பகுதிகளுக்கும் நேரில் வந்து ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

**கோழி தீவனத்தில் புரதச்சத்தை குறைக்க வேண்டும்**

First Published : 22 Dec 2010 12:05:44 PM IST

நாமக்கல், டிச. 21: கோழி தீவனத்தில் புரதச் சத்தை குறைக்க வேண்டுமென கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம்மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அடுத்த 3 நாள்களுக்கு லேசான மேகமூட்டம், மிதமான காற்றின் வேகம் கொண்ட சீதோஷ்ணநிலை நிலவும். பிற்பகலுக்குமேல் காற்றின் ஈரப்பதம் குறையும். இரவு நேர வெப்பம் குறையத் தொடங்கியுள்ளது. இந்த தட்ப வெப்பநிலையில் கோழிகளின் தீவன எடுப்பு இயல்பைவிட அதிகமாகும்.

முட்டையின் எடை கூடுதலடைய வாய்ப்புள்ளதால், கோழிகளுக்கான தீவனத்தில் புரத சத்தை 0.5 சதவீதம் என்ற அளவில் குறைத்துக் கொடுக்க வேண்டும். தீவன எடுப்பைக் கட்டுப்படுத்த 2,550 கிலோ கலோரிகள் கொண்ட தீவனத்தை கோழிகளுக்கு அளிக்க வேண்டும். கோழிகள் மீது நேரடியாக வெயில் படுவதை தடுக்க உயர்மனைகளில் படுதா அமைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கான ஆலோசனை: அதிக ஈரப்பதம், குறைந்த இரவுநேர வெப்பநிலையால் நெற் பயிரில் இலை சுருட்டுப்புழு மற்றும் குருத்துப்பூச்சி தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இப்பூச்சி தாக்குதல் ஆரம்ப நிலையில் இருந்தால், 5 சதவீதம் வேப்பங்கொட்டைச் சாறு, கரைசலை தெளிக்க வேண்டும்.

பாதிப்பு அதிகமாக இருந்தால், தண்ணீரில் குளோரிபைரிபாஸ் அல்லது புரோப்பனோ பாஸ் -2 மி.லி., என்ற அளவில் தெளிக்க வேண்டும். கொடிவகைக் காய்கறிகளான பாகல், பீர்க்கன், சுரை, பூசணி, பரங்கி, புடலைகளில் பூக்கள் எண்ணிக்கை அதிகரிக்க, எத்ரோல் என்ற வளர்ச்சி ஊக்கியை 1 லிட்டர் தண்ணீரில் 2.5 மி.லி., என்ற அளவில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை காப்பாற்றுங்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,03:27 IST

வாலாஜாபாத்:வாலாஜாபாத் பகுதியில், மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிரை காப்பாற்ற விவசாயிகள் தடுப்பு, பாதுகாப்பு முறையை கையாள வேண்டும் என, வேளாண் அலுவலர் முத்துலட்சுமி தெரிவித்தார்.காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையால் ஏரிகள் நிரம்பியுள்ளன. சம்பா பட்டத்தில் பயிரிடப்பட்ட பயிர்கள் தண்ணீரில் மூழ்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியது விவசாயிகளிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.தண்ணீரில் மூழ்கும் பயிர்களின் பாதுகாப்பு குறித்து வாலாஜாபாத் வேளாண் அலுவலர் முத்துலட்சுமி கூறியதாவது:சம்பா பட்டத்தில் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்களில் 10 முதல் 15 நாளான பயிர்கள் போதிய வளர்ச்சி பெறாமல் இருக்கும். வரப்பு உயரத்தில் உள்ள தண்ணீரில் மூழ்கும் வாய்ப்பு எற்படும்.அப்போது நடவு செய்யப்பட்ட வயலில் பயிர்களின் பாதுகாப்பை மனதில் கொண்டு, பயிர்களை லேசாக சாயும்படி கால்களால் அழுத்தி விட வேண்டும். பின்னர் வயலில் தேங்கியுள்ள தண்ணீர் வெளியேற வழி ஏற்படுத்த வேண்டும்.தண்ணீர் வடிந்த பின், ஒரு ஏக்கர் பயிருக்கு 100 கிலோ ஜிப்சத்தை உரமாக இட்டு தண்ணீரை பாய்ச்ச வேண்டும். ஊட்டச்சத்து குறைவாக உள்ள பயிர்களுக்கு டி.ஏ.பி., 1 சதவீதம், ஜிங்க் சல்பேட் 0.5 சதவீதம் 200 லிட்டர் தண்ணிரில் கலந்து பயிர்களுக்கு தெளிக்க வேண்டும். 25 கிலோ அம்மோனியா சல்பேட் அல்லது 50 கிலோ அம்மோனியம் குளோரைடு போன்ற தழைச்சத்து உரங்களை வேர்பயிர்களுக்கு உரமாக இடலாம்.பயிர்களை கறுப்பு நாவாய் பூச்சி, குருத்துப்பூச்சி, தண்டு அழுகுதல், புகையான் ஆகிய நோய்களிலிருந்து பாதுகாக்க, ஒரு ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் எக்ஸகனசோல் அல்லது 200 கிராம் கார்பன் டைசிம் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.பயிர்களின் வேர்பகுதிகளில் காற்றோட்டமாக இருக்கும்படி தேங்கும் தண்ணீரை வெளியேற்றினால், சம்பா பட்டத்தில் பயிரிட்ட நெற்பயிர்களை பாதிப்பின்றி காப்பாற்றலாம்.அறுவடைக்காக காத்திருக்கும் நெற்பயிர்களை, நெற்கதிர்கள் சாயாதவாறு வரப்புகளில் மடக்கி விடவேண்டும். நெற்கதிர்களை சூழ்ந்துள்ள தண்ணீர் வெளியேற வரப்புகளை வெட்டி விட வேண்டும்.இவ்வாறு முத்துலட்சுமி தெரிவித்தார்.

**கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,03:30 IST

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூரில் அமைந்துள்ள உழவர் பயிற்சி மையத்தில், "கோழி வளர்ப்பு' பயிற்சி முகாம் நாளை நடைபெற உள்ளது.உயர்தர வீரியரக கோழிக்குஞ்சுகள், அறிவியல் முறையிலான பராமரிப்பு, சரிவிகித உணவு, ஆரோக்கியம், முதலீடு ஆகியவை கோழிப்பண்ணை வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாகும்.தற்போது கோழி இறைச்சி மற்றும் முட்டை தேவை அதிகரித்துள்ளது. கோழி பண்ணையாளர்கள் தங்கள் பணியை கவனமாகவும், திறம்படவும் செய்தால் லாப சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கோழி பண்ணையாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வதற்காக, ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில், நாளை "கோழி வளர்ப்பு' இலவச பயிற்சி முகாம் காலை 10 மணிக்கு துவங்குகிறது.விருப்பம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம் என, உழவர் பயிற்சி மையத்தலைவர் சுந்தர்ராமன் தெரிவித்துள்ளார்.

**வெங்காயம் விலை உயர்வு எதிரொலிபகோடா, ஆம்லெட் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,02:16 IST

கடலூர்:வெங்காயம் விலை உயர்வால் பகோடா மற்றும் ஆம்லெட் விலை உயர்ந்துள்ளது. ஓட்டல்களில் ஆனியன் தோசைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.
வெங்காயம் விலை எப்போதும் இல்லாத அளவிற்கு கிலோ 80 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதனால் ஓட்டல் நடத்துபவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இதன் காரணமாக பெரும் பாலான அசைவ ஓட்டல்களில் பிரியாணிக்கு "சைடிஷ்" வெங்காய தயிர் பச்சடி வைப்பதை தவிர்த்து வருகின்றனர். பெரிய ஓட்டல் உரிமையாளர்கள் தங்கள் நிறுவனத்தின் பெயரை தக்க வைத்துக் கொள்ள குறைந்த அளவு வெங்காய பச்சடி தரப்படுகிறது. அதேப்போன்று ஆனியன் தோசை மற்றும் ஆனியன் ரோஸ்ட் குறைந்த அளவே போடப்படுகிறது.அசைவ பிரியர்களின் முக்கிய "சைடிஷான' ஆம்லெட் வெங்காய விலை உயர்வு காரணமாக இரண்டு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. சாலையோர கடைகளில் வெங்காயம் இல்லாமல் ஆம்லெட் போட்டுத் தரப்படுகிறது.

வெங்காயத்துடன் ஆம்லெட் கேட்டால் இரண்டு ரூபாய் கூடுதலாக வசூலிக்கின்றனர்.அதேப்போன்று வெங்காயம் கொண்டு தயாரிக்கப்படும் பகோடாவின் விலை கிலோவிற்கு 40 ரூபாய் உயர்ந்துள்ளது.இதுகுறித்து ஸ்வீட் கடைக்காரர் கூறுகையில், "ஏற்கனவே எண்ணெய் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வரும் நிலையில் தற்போது வெங்காயம் எப்போதும் இல்லாத அளவில் கிலோவிற்கு 40 ரூபாய் உயர்ந்துள்ளது. சிறிய வெங்காயத்தை பகோடாவிற்கு

பயன்படுத்த முடியாது. பெரிய பெல்லாரி வெங்காயத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டியுள்ளதால் பகோடாவின் விலையை கிலோவிற்கு 40 ரூபாய் உயர்த்தியுள்ளேன்' என்றார்.

**நெற்பயிரை தாக்கும் நோ#கட்டுப்படுத்த ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,02:07 IST

நெல்லிக்குப்பம்:நெற்பயிரை தாக்கும் நோ#களை தடுக்க வேளாண்மை துறை அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.அண்ணாகிராமம் வேளாண்மை உதவி இயக்குனர் சம்பத்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:அண்ணாகிராமம் வட்டாரத்தில் பல்வேறு இடங்களில் சாகுபடி செ#துள்ள நெற்பயிரில் பூக்கும் தருணத்தில் மஞ்சள் நிற கரிப்பூட்டை நோ# பரவலாக காணப்படுகிறது. நெல் மணியின் மேல்புறத்தில் மஞ்சள் நிறத்தில் வெல்வெட் மாதிரியான பூஞ்சானம் படர்ந்துள்ளது. இது நெல் மணியின் நிறத்தை மாற்றுவதால் தரம் குறைந்து விடும்.இதனைத்தடுக்க காண்டாப், டிர்ட், கார்பண்டாசிம் இதில் ஏதாவது ஒரு மருந்தை 200 மி.லி., எடுத்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கதிர் மணிகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். குளிர்ந்த தட்ப வெட்ப நிலை நிலவுவதால் தூர்கட்டும் தருணம் மற்றும் பூக்கும் தருணத்தில் உள்ள நெல் பயிர்களுக்கும் மேற்கண்ட தடுப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்.இவ்வாறு செ#திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,02:03 IST

சிதம்பரம்:உளுந்து பயிரில் அதிக லாபம் பெற விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.சிதம்பரம் கோட்ட வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை சார்பில் பொருள் குழுக்கள் துவங்கப்பட்டு சாகுபடி குறித்த தொழில் நுட்ப பயிற்சிகள் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.குறிப்பாக தற்போது உளுந்து பயிரில் அதிக லாபம் பெறும் நோக்கில் வேளாண் அலுவலர் சித்ரா பயிற்சி அளித்து வருகிறார்.

பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் பி.முட்லூரில் தியாகராஜன், பூவாலையில் ஆறுமுகம், அரியகோஷ்டியில் செல்வமணி, புவனகிரி வட்டாரத்தில் ஊராட்சி தலைவர் ரமேஷ், கலியபெருமாள், கீரப்பாளையம் வட்டாரத்தில் சாக்காங்குடி கிராமத்தில் சந்தோஷ்குமார் ஆகியோர் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டது.பொருட் குழுக்களுக்கு அவர்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு பற்றியும், உழவர் சந்தையின் நன்மைகள் பற்றியும் விளக்கப்பட்டது.பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் ராயர், ரமேஷ், ராயப்பநாதன் செய்திருந்தனர்.

**வேளாண்துறை கலந்துரையாடல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,01:18 IST

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் கலந்துரையாடல் நடந்தது.கெடிலம் உபவடிநில நீர்வளத்திட்டத்தின் கீழ் நடந்த நிகழ்ச்சிக்கு துணை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் செந்தில் வரவேற்றார்.நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் ராமமூர்த்தி, சேமிப்பு கிடங்கு மேலாளர் அண்ணாதுரை, இதயம் நல்லெண்ணெய் கொள்முதல் மேலாளர் தங்கராஜ், சுகுணா கோழிப்பண்ணை திருமூர்த்தி, நவீன அரிசிஆலை உரிமையாளர் குமார், வேளாண் உதவி இயக்குனர்கள் பெரியசாமி, தெய்வநீதி, நிர்மலா மற்றும் விவசாயிகள் கலந்துக் கொண்டனர். உதவி வேளாண் அலுவலர் கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

**தேங்காய் பருப்பு உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,02:14 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் தேங்காய் பருப்பு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கோபி வட்டார பகுதியில் குளிர்ந்த சீதோஷ்ண நிலை தொடர்ந்து நீடிக்கிறது. வெயிலை நம்பியே தேங்காய் பருப்பை விவசாயிகள் உற்பத்தி செய்கின்றனர். வெயிலை அதிகம் பார்க்க முடியாததால், உடைத்த தேங்காய் பருப்பை காய வைக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். மேலும் கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்களால், தேங்காய்க்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் தேங்காயை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு 1ம் தேதி 144 மூட்டை, 8ம் தேதி 215, 15ம் தேதி 113 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. நேற்று வெறும் 55 மூட்டைகளே விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ 55.26 ரூபாய், குறைந்தபட்சமாக 53.26 ரூபாய், சராசரியாக 54.39 ரூபாய்க்கு விற்றது. நடப்பு வாரம் கிலோவுக்கு 1.35 ரூபாய் விலை அதிகரித்திருந்தது.

**பருத்தி ஏற்றுமதிக்கு தடை வேண்டாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,03:40 IST

அன்னூர்:"பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கக்கூடாது' என, உழவர் உழைப்பாளர் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.உழவர் உழைப்பாளர் கட்சி கூட்டம் எஸ்.எஸ்.குளத்தில் நடந்தது.

வட்டாரத் தலைவர் கொண்டல்சாமி வரவேற்றார். மாவட்டத்தலைவர் பாலசுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். கட்சியின் மாநிலத்தலைவர் செல்லமுத்து தலைமை வகித்து பேசியதாவது:விவசாயிகளின் விளைபொருளான பருத்திக்கு கூடுதல் விலை கிடைக்க கோரிக்கை விடுக்காமல், பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்க கோருகின்றனர். பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கக்கூடாது. சிலர் கூட்டத்தை சேர்த்து, "விவசாயிகளுக்கு எந்த கட்சியும், எதுவும் செய்யவில்லை' என்று கூறுவது, பெரிய கட்சிகளிடம் பேரம் பேசி அக்கட்சிகளிடம் அதிக சீட் பெறத்தான். இலவச மின் இணைப்பு பெற அதிகாரிகள் பல நிபந்தனைகளை விதிக்கின்றனர். மின்வாரிய அலுவலகத்துக்கு நடக்கும் விவசாயிகள் வெறுத்துப் போகின்றனர். 2000ம் ஆண்டுக்கு முன் பதிவு செய்த விவசாயிகளுக்கு எந்த நிபந்தனையும் இல்லாமல் மின் இணைப்பு வழங்க வேண்டும்.தேசிய வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். டிராக்டர் கடனுக்காக ஜப்தி செய்வதை கைவிட வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தால் விவசாயத்துக்கு போதிய தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. அத்திட்டத்தில் வேலை செய்வோரை விவசாய பணிகளுக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு செல்லமுத்து பேசினார்.கூட்டத்தில், மாநில பொருளாளர் பாலசுப்ரமணியம், துணைத்தலைவர் காளிமுத்து, அன்னூர் வட்டார தலைவர் சுந்தரமூர்த்தி மற்றும் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**மழையால் பசுந்தீவனங்கள் துளிர்த்தன**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,02:00 IST

வெள்ளகோவில்:வெள்ளகோவில் சுற்றுப்பகுதிகளில் கடந்த மாதம் பெய்த தொடர் மழையால், பசுந்தீவனங்கள் துளிர்த்துள்ளன. கால்சிய சத்து நிறைந்த கொழுக்கட்டை புல் அதிகளவு வளர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.வெள்ளகோவில், முத்தூர், மூலனூர் பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இதனால், அதன் உப தொழிலான கால்நடை வளர்ப்பில் பெரும்பாலானோர் ஆர்வம் காட்டி வருகின்றனர். முதியவர்கள் மட்டுமின்றி, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைபார்த்து ஓய்வு பெற்றவர்களும் ஆடு, மாடு வளர்ப்பில் அக்கறை காட்டி வருகின்றனர். கால்நடைகளுக்கு பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தீவனங்களை அதிக விலை கொடுத்து வாங்க முடியாத நிலையில், பெரும்பாலானோர் பசுந்தீவன நிலங்களில் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்கின்றனர். வெள்ளகோவில் சுற்றுப்பகுதிகளில் கொழுக்கட்டை புல் அதிகளவு வளர்வதால், மேய்ச்சலுக்கு நிலம் விடுவோர் அதிகம் உள்ளனர். இவர்களிடம் நாளொன்றுக்கு, நேர அடிப்படையில் பணம் கொடுத்து விட்டு, தங்களது கால்நடைகளை மேய விடுகின்றனர்.தொடர்ந்து மேய்ச்சலுக்கு விட்டு, பசுந்தீவன பற்றாக்குறை ஏற்பட்ட நிலையில், கால்நடைகளுக்கு தீவனமாக கஞ்சி காய்த்து கொடுத்து வந்தனர். கடந்த மாதம் பெய்த கன மழையால், தற்போது பசுந்தீவனங்கள்

துளிர்விட்டுள்ளன.குறிப்பாக, கொழுக்கட்டை புல் அதிகம் வளர்ந்துள்ளது. கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனங்கள் துளிர்த்துள்ளதால், வெள்ளகோவில் கால்நடை வளர்ப்பாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பயிர் காப்பீடு செய்ய வலியுறுத்தல் டிச.,31 வரை அவகாசம் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,03:48 IST

கரூர்: "விவசாயிகள் தங்கள் சாகுபடி பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்வதன்மூலம் இயற்கை சீற்ற பாதிப்பு மற்றும் பூச்சிகள், நோய் பாதிப்புக்கு இழப்பீடு பெறலாம்' என, வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) கவிதா அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: தேசிய வேளாண் பயிர் காப்பீடுத் திட்டத்தில், குத்தகைத்தாரர்கள் உட்பட அனைத்து விவசாயிகளும், வங்கி கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் சேர்ந்து பயன்பெறலாம். தாந்தோணி வட்டாரத்தில் 2010-11ம் ஆண்டில் நெல் சாகுபடி செய்திருக்கும் விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வி.ஏ.ஓ., சான்று தேவையில்லை.

கடன் பெறும் விவசாயிகளுக்கு கடன் வாங்கிய தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலமோ பிரீமியத்தை கூடுதலாக கடனாக அளித்து பயிர் காப்பீடுத் திட்டத்தில் சேர அனுமதிக்கப்படுவர்.

கடன் பெறாத விவசாயிகள், விவசாய துறை மூலம் விண்ணப்பம் பெற்று நெல் சம்பா பயிருக்கு அருகிலுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பணம் செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம்.

மொத்த பிரீமியத்தொகையில் 50 சதவீதம் மட்டுமே விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது. அதாவது 130 ரூபாய் மட்டும். மீதமுள்ள 50 சதவீதம் பிரீமியத் தொகையை அரசே காப்பீடு நிறுவனத்துக்கு செலுத்துகிறது. கடன் பெறும் விவசாயிகள் வரும் 31ம் தேதிக்குள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

மேலும், விபரங்களுக்கு தாந்தோணி, வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்துக்கு நேரில் சென்றோ அல்லது 04324-255225 என்ற டெலிஃபோன் எண்ணில் தொடர்பு கொண்டோ தெரிந்துகொள்ளலாம்.

**துவங்கியது இரட்டைமடி மீன்பிடிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,00:44 IST

ராமேஸ்வரம் : ராமேஸ்வரம் கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட இரட்டைமடி மீன்பிடிப்பு துவங்கியது.
கடல் வளத்தையும், மீன்வளத்தையும் அழிக்கும் இரட்டைமடி வலையினால் மீன்பிடிப்பதற்கு அரசு தடை விதித்துள்ள நிலையில், ராமேஸ்வரம் பகுதியில் மட்டும் ஆண்டு தோறும் இவ்வகை மீன்பிடிப்பில் மீனவர்கள் ஈடுபடுவதும், பாதிக்கப்பட்ட மீனவர்களின் புகாரை தொடர்ந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதும் , வழக்கமாக இருந்து வருகிறது. இவ்வகை மீன்பிடிப்பில் பிடித்து வரப்படும் பேசாளை மீன்கள், ராமேஸ்வரத்தின் பல்வேறு இடங்களில் காயவைப்பதாலும், ரோட்டில் கழிவுரத்தம் வழிய வாகனங்களில் எடுத்துச்செல்வதாலும், புழுக்கள் உருவாகி மணிஈக்கள் பெருகி பல்வேறு தொற்று நோய்கள் பரவுகிறது. சுகாதாரத்துறையின் எச்சரிக்கையை தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் இதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வந்தாலும், மீன்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போது இரட்டைமடி மீன்பிடிப்பு ஆண்டு தோறும் தடையின்றி தொடர்கிறது. ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற படகுகளில் 200 க்கும் மேற்பட்ட படகுகள் இரட்டைமடி வலையில் மீன்பிடிக்க சென்றது குறித்து, மீன்துறை அதிகாரிகளிடம் புகார் செய்தும் நடவடிக்கை இல்லை. மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**டி.ஏ.பி.கரைசல்தெளிப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,03:36 IST

தென்காசி:தேன்பொத்தையில் பயறு வகை பயிரில் டி.ஏ.பி.கரைசல் தெளிப்பு முகாம் நடந்தது.தென்காசி வட்டாரத்தில் தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயறு வகை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு வேளாண்மை துறை சார்பில் டி.ஏ.பி.உரம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. பயறு வகை பயிரில் அதிகப்படியான மகசூல் பெறும் பொருட்டு டி.ஏ.பி.கரைசல் தெளிப்பு முகாம் தேன்பொத்தையில் நடந்தது.முகாமிற்கு நெல்லை வேளாண்மை துணை இயக்குநர் அழகிரிசாமி தலைமை வகித்தார். தேன்பொத்தை பஞ்.,தலைவர் திருப்பதி முன்னிலை வகித்தார். தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரீஸ்சேகர் டி.ஏ.பி.கரைசல் தெளிப்பு திட்டம் பற்றி விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் சேக்மைதீன் டி.ஏ.பி.கரைசல் தெளிப்பு மற்றும் அதன் பயன் பற்றி கூறினார். திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.வேளாண் உதவி அலுவலர் நாகராஜன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை

வேளாண்மை உதவி அலுவலர்கள் நாகராஜன், சபரி, பரமசிவன், மாரியப்பன், குமார், அன்சர்அலி செய்திருந்தனர்.

**ராமநதி அணைநீர்மட்டம் 79 அடி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,03:33 IST

ஆழ்வார்குறிச்சி:கடையம் ராமநதி அணையில் தொடர்ந்து பெய்த மழையினால் 79 அடி நீர் உள்ளது. இதனால் ராமநதி அணை கடல்போல் காட்சியளிக்கிறது.
கடையத்திற்கு அருகே ராமநதி அணை உள்ளது. இதன் கொள்ளளவு 84 அடியாகும். தற்போது பிசான பருவத்திற்காக 4 ஆயிரத்து 950 ஏக்கர் நிலப்பரப்பு பயிரிடப்பட்டுள்ளது. இவ்வணைக்குள் 50 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. விவசாயத்திற்காக 50 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.நீரினை பயன்படுத்துவோர் விவசாயிகள் சங்க தலைவர் ஜீவா கூறுகையில், ""தற்போதுள்ள தண்ணீர் விவசாயிகளுக்கு காணாது. மேலும் மழை பெய்தால் விவசாயிகளுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். வரும் ஜனவரி மாத கடைசியில் இதேபோல் 79 அடி நீர் இருக்க வேண்டும்" என கூறினார்.

**மார்கழி வந்தாலே கண்ணை கட்டுதே... : காய்கறி விலைக்கு கண்ணீர் தான் வட்டியோ?**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,00:42 IST

ராமநாதபுரம் : மார்கழி மாதம் வந்தால் காய்கறி விலை ஏற்றம் காண்பதும், குடும்பத்தலைவிகள் கண்ணீர் வடிப்பதும் வாடிக்கையாகிவிட்டது. இந்த ஆண்டும் இதற்கு விதிவிலக்கல்ல.
அழகிய கோலங்கள் மற்றும் கோஷ்டி பஜனைக்கு பெயர் போன மார்கழியில் மக்களுக்கு ஒருவிதமான பாதிப்பும் இருந்து வருகிறது. காய்கறிகளின் விலை ஏற்றம் தான் அதற்கு காரணம். பொதுவாக கார்த்திகை மாதத்தின் தொடக்கத்திலே காய்கறிகளின் விலை ஏற்றம் நகரத்தொடங்கும். ஐயப்ப பக்தர்களுக்கான மாதம் என்பதால், இந்த சமயத்தில் அசைவ பண்டங்கள் விற்பனை சரிவில் இருப்பது வழக்கம்.
அதே சமயம் காய்கறிகளுக்கு ஏகத்துக்கும் கிராக்கி ஆகிவிடும். மார்கழி நெருங்கும் போது, அதன் விலை விண்ணை முட்டும் அளவுக்கு எகிறும். தொட்டுத்தொடர்ந்து வரும் இந்த விலை ஏற்றம் குறித்து அரசுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும், அதை பொதுமக்கள் சமாளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.
இம்முறை நல்ல மழை பெய்துள்ளதால், பல பகுதிகளில் காய்கறிகளின் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில இடங்களில் காய்கறிகள் நாசமாகியுள்ளன. இதனால் தேவை அதிகரித்தும் போதிய காய்கறிகள் கிடைக்கவில்லை. நம்மவர்கள் விலை ஏற்ற இது ஒன்று போதாதா? இன்று பல காய்கறிகளின் விலை முன்பு இருந்ததை விட எங்கோ போய்விட்டது.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் விலை முரண்படாக மாறியுள்ளது. இதனால் இல்லத்தரசிகள் புலம்பலுக்கு ஆளாகியுள்ளனர்.

ஜெயந்தி(ராமநாதபுரம்): காய்கறிகள் விலை பார்க்கும் போது சமைக்கும் ஆசையே வராது. கடந்த மாதம் தான் விலை ஏற்றம் கண்டது என்றால், அதை தொடர்ந்து தற்போதும் விலை ஜரூராக எகிறியுள்ளது. நடுத்தர குடும்பங்களுக்கு இது பெரிய பாதிப்பாக அமையும். ஒவ்வொரு ஆண்டும் இந்த மாதங்களில் வரும் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

பத்மா(பரமக்குடி): காய்கறிகளின் இந்த விலை ஏற்றம் பணம் படைத்தவர்களால் கூட சமாளிக்க முடியாது. ஓட்டலில் வாங்கி உண்ணும் செலவு ஏற்படுகிறது. ஏழைகள் குறைந்த விலையில் கிடைக்கும் தரமற்ற காய்கறிகளை வாங்கி உண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

முத்துக்குமாரி(மண்டபம்): ஐயப்ப பக்தர்கள் சீசன், இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட இந்த விலை ஏற்றம், பொதுமக்களை பாதித்துள்ளது. இது தற்போதைய நிலவரத்திற்கு சொல்லப்படும் காரணம் தான். இதே போல ஒவ்வொரு சீசனுக்கும் ஒரு காரணத்தை கூறி விலை ஏற்றுகின்றனர். கூலுக்கு வெங்காயத்தை கடித்து பிழைப்பை ஓட்டலாம் என்றால், வெங்காயம் விலை அதை விட மோசம்.

சம்சாத் பேகம்(முதுகுளத்தூர்): பெட்ரோல், டீசல் விலை எல்லாம் சேர்ந்து காய்கறிகளின் விலையை உச்சத்திற்கு கொண்டு செல்கிறது. சில நேரத்தில் காய்கறிகள் உற்பத்தியில் ஏற்படும் இழப்பையும் விலையில் காட்டுகின்றனர். இது பொதுமக்களுக்கு கூடுதல் சுமையாகிறது.

வெள்ளையம்மாள்(திருவாடானை): காய்கறிகள் விலை ஏற்றம் கண்ட நிலையில், விற்பனை ஆகாது என்ற பயத்தில் அசைவ பொருட்களை விற்பதில்லை. குறைந்த விலையில் விற்ற கத்தரிக்காய் கூட, இன்று ஏற்றத்தை கண்டுள்ளது. ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய்க்கு வாங்கினாலும், சமைக்க ஆகும் பொருளின் செலவு தாங்க முடியாதது.

சிக்கனமாக சமையல் செய்ய டிப்ஸ் : விலைவாசி உயர்வால் எந்த உணவுப் பொருளைத் தொட்டாலும் "சுடுகிறது'. பிடித்த காய்கறி, பிடித்த குழம்பு, பிடித்த டிபன் என்றெல்லாம் பார்த்து, பார்த்து சமையல் செய்ய முடியாது போலிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்காகவே, சிக்கனமாக சமையல் செய்ய சில "டிப்ஸ்'கள்:

* தேங்காயை கிலோ அளவில் தராசில் தூக்கி வாங்க வேண்டிய நிலைமை உருவாகி விட்டது. இதனை சமையலில் தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம். இது உடலுக்கும் நல்லது.

* காய்கறிகளுக்குப் பதில், நிறைய கீரை பயன்படுத்தலாம். பொறியலுக்கு மட்டுமல்லாமல், கீரையில் சாம்பார் வைத்தால், "சூப்பர்' சுவையாக இருக்கும்.

* தக்காளிக்குப் பதில் புளியை பயன்படுத்தலாம்.

* விலை அதிகம் என்பதால், துவரம் பருப்பு, பாசிப் பருப்புக்குப் பதில், காய வைக்கப்பட்டு பாக்கெட்டுகளில் விற்கப்படும் மொச்சை, பட்டாணி, சோயா பீன்ஸ் போன்றவற்றை அவ்வப்போது, முதல் நாளே ஊற வைத்து சாம்பார் அல்லது குழம்பு வைக்கலாம். இவற்றை, சிறிது அளவு ஊற வைத்தாலே, நிறைய பருப்பு கிடைக்கும்.

* இட்லி மாவு தயாரிக்க, அரிசிக்குப் பதில் குருணை அரிசியைப் பயன்படுத்தலாம். இது முழு அரிசி விலையை விட, பெருமளவு குறையும்.

* மிளகாய் வற்றலுக்குப் பதில் பச்சை மிளகாயை பயன்படுத்தலாம். வற்றலை விட, பச்சை மிளகாயை குறைவாக பயன்படுத்தினால் போதும்.

* சிலிண்டர் விலை உயரப் போவதால், காஸ் ஸ்டவ்வை "சிம்'மிலேயே வைத்து பயன்படுத்துங்கள்.

* அடுப்பில் குக்கரை வைக்கும்போது, அரிசியுடன் முடிந்த அளவு, பருப்பு, காய்கறிகளையும் சேர்த்து வேக வையுங்கள்.

* மறுநாள் என்ன சமையல் செய்யலாம் என முதல் நாளே திட்டமிட்டு, அதற்குரிய பொருட்களை தயார் செய்து வையுங்கள். திடீர் திடீரென முடிவு செய்தால், அடிக்கடி கேஸ் ஸ்டவ்வை பற்ற வைக்க வேண்டி இருக்கும்.

* குக்கரில் போடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே, அரிசியை ஊற வைத்தால், விரைவாக வெந்து விடும்.

* இட்லி, தோசை மாவை அடிக்கடி அரைக்காமல், மொத்தமாக அரைத்து, "பிரிட்ஜில்' வைத்துக் கொள்ளலாம்.

* சாம்பார் அல்லது குழம்பில் புளிப்பு சுவையை ஏற்படுத்த சீசன் நேரங்களில், விலை குறைவாக இருக்கும் மாங்காயை வெட்டிப் போடலாம். இது புளிப்பு சுவையை மட்டுமல்லாது, சாம்பாருக்கு சுவையையும் அதிகரிக்கும்.

* தினமும் காய்கறிகளையே தேடிக்கொண்டிருக்காமல், கருணை, சேனை கிழங்குகளையும் பயன்படுத்தலாம். விலை குறைவாக விற்கும்போது, இவற்றை மொத்தமாக வாங்கி வைத்துக்கொள்ளலாம். எத்தனை மாதங்கள் ஆனாலும் இவை கெடுவதில்லை.

இந்த யோசனைகள் எல்லாம் சரி தான். இவற்றையெல்லாம் விட, அடிக்கடி "விரதம்' இருப்பது, விலைவாசிக்கு ரொம்பவே நல்லது. உடலுக்கும் உகந்தது என்கிறார், அனுபவம் மிக்க குடும்பத்தலைவி.

**நெற்கதிரோடு வந்த விவசாயிகள் அமைச்சரிடம் முறையீடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,00:43 IST

முதுகுளத்தூர் : கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்ககோரி நெற்கதிரோவு வந்த விவசாயிகள் அமைச்சர் தங்கேவேலனிடம் முறையிட்டனர். முதுகுளத்தூர் யாதவர் திருமண மஹாலில் முதியோர் ஓய்வூதியம் உட்பட அரசின் பல

சலுகைகளுக்காக, அமைச்சர் தங்கவேலன் தலைமையிலும், ரித்தீஷ்குமார் எம்.பி., முருகவேல்எம்.எல்.ஏ., முன்னிலையிலும் முகாம் நடந்தது. பெயருக்கு மட்டும் அமைச்சர், எம்.பி., எம்.எல்.ஏ., க்கள் சில விண்ணப்பதாரர்களிடம் மனுக்களை பெற்றனர்.
அமைச்சரிடம் மனு வழங்கலாம் என்று வந்த பொதுமக்கள், முதியோர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. முதுகுளத்தூர், தூரி, செல்வநாயகபுரம், தேரிருவேலி, கருமல் பகுதிகளை சேர்ந்தவர்கள், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடுகேட்டு நெற்கதிரோடு முறையீடு செய்தனர். மனுக்களை பெறுவதற்காக ஊராட்சி பணியாளர்கள், ஒன்றிய, தாலுகா அலுவலக பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டதால் அரசு அலுவலகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. அமைச்சர் தங்கவேலன் பேசியதாவது: மக்கள் மனுமீதான விசாரணை 10 நாள்களில் முடிவுற்று, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த மனுக்களையும் நிராகரிக்காமல் நிவாரணம் கிடைக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து பகுதிகளுக்கும் காவிரி குடிநீர் தடையின்றி கிடைக்கும் வகையில் சம்மந்தப்பட்டவர்கள் செயல்பட வேண்டும்,என்றார். விபத்தில் பலியான மாணவர் பாலமுருகனுக்கான இழப்பீட்டு தொகை ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 500 ஐ மாணவனின் தந்தையிடம் அமைச்சர் வழங்கினார், ஒன்றிய தலைவர் ஈஸ்வரி, பேரூராட்சி தலைவர் சசிவர்ணம், துணை தலைவர் ஷாஜகான், மாவட்ட கவுன்சிலர் முத்துராமலிங்கம், ஒன்றிய செயலாளர் முனியசாமி, மாவட்ட தி. மு.க., துணை செயலாளர் கருப்பையா, ஒன்றிய கவுன்சிலர்கள் செல்தில்குமார், திருமூர்த்தி, மகேஷ்வரி, தாசில்தார் பிச்சை, ஆணையாளர்கள் தங்கராஜ், சித்தரவேலு (ஊராட்சி ), தாசில்தார் குருசாமி, செயல் அலுவலர் முனியாண்டி பங்கேற்றனர்.

**நெற்பயிரில் இலைச்சுருட்டு புழு விவசாயத்துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,01:13 IST

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் தொடர் மழையால் நெற் பயிரில் இலைச்சுருட்டு புழு தாக்குதல் அதிகரித்துள்ளது. இதைகட்டுப்படுத்த விவசாயத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

விவசாயத்துறை உதவி இயக்குனர் பெரியசாமி கூறியதாவது: பெரியகுளம் தாலுகா பகுதிக்கு உட்பட்ட தென்கரை, வடகரை, தாமரைக்குளம், வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம் ஆகிய பகுதிகளில் நெல் ஏடி.டி. 39, ஏ.டி.டி. 45 ரகங்கள் ஐநூறு ஏக்கருக்கும் மேலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை தொடர்ந்து பெய்ததால் பயிர்களில் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதல் அதிகளவில் உள்ளது. முன் எச்சரிக்கையாக நெற்பயிர்களை இலைச்சுருட்டு புழுவின் தாக்குதலிருப்பது காப்பது அவசியம்.

தலைச்சத்து உரமான யூரியாவினை மேலுரமாக மூன்று தடவை பிரித்து வேப்பம்புண்ணாக்குடன் ஐந்திற்கு, ஒன்று என்ற விகிதத்தில் நெற்பயிர்களுக்கு சீராக இடவேண்டும். தண்ணீரை இரண்டரை செ.மீ., அளவு வயலில் நிறுத்தி அதிகப்படியான நீரை வடித்திட வேண்டும். மேலும் குளோரிபைரியாஸ் அல்லது எண்டோசல்பான் அல்லது குவினால்பாஸ் இவற்றில் ஏதாவது ஒரு மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு மி.லி., வீதம் கலந்து காலை அல்லது மாலை வேளையில் மழை இல்லாத நேரத்தில் தெளிக்க வேண்டும் என்றார்.

**உச்சத்தில் காய்கறி விலை, அச்சத்தில் குடும்பத்தலைவிகள் : சிக்கனமாக சமையல் செய்ய டிப்ஸ்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,01:07 IST

தேனியை சுற்றி உள்ள கிராமங்களில் இருந்தும், வத்தலக்குண்டு, கொடைக்கானல், தேவாரம், கம்பம் பகுதிகளில் இருந்தும் காய்கறி வரத்து உள்ளது.

தினமும் தேனி மார்க்கெட்டிற்கு மட்டும் நூறு டன்னுக்கு மேல் காய்கறிகள் வரும். கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து பெய்த மழையால் காய்கறி சாகுபடி பாதிக்கப்பட்டு மார்க்கெட்டிற்கு 40 டன் காய்கறி வருவதே சிரமம் என்ற நிலை உள்ளது. வரத்து குறைந்த நேரத்தில், கார்த்திகை, மார்க்கழி ஐயப்ப பக்தர்களின் சீசன் தொடங்கி உள்ளதால், காய்கறிகளின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே காய்கறிகளின் விலை படிப்படியாக உயரத்துவங்கியது. தற்பாது அனைத்து வகை காய்கறிகளின் விலையும் மூன்று மடங்கு உயர்ந்து விலை உச்சத்திற்கு சென்றுள்ளது.
காய்கறிகளின் விலை (கிலோவில்): சென்ற மாதம் 10 ரூபாய்க்கு விற்ற தக்காளி தற்பாது 40 ரூபாயை நெருங்கியுள்ளது. வெங்காயத்தின் விலையும் 20 ரூபாயில் இருந்து 50 ரூபாயாக உயர்ந்துள்ளது. 8 ரூபாயாக இருந்த அவரைக்காய் 24 ரூபாயாகவும், 10 ரூபாயாக இருந்த புடலங்காய் 30 ரூபாயாகவும், 12 ரூபாயாக இருந்த முருங்கை பீன்ஸ் 28 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. ஐந்து ரூபாய்க்கு விற்ற தேங்காய் இன்று 15 ரூபாயாக உள்ளது. தற்போதைய நிலையில் கிலோ 30 ரூபாய்க்கும் குறைவாக காய்கறியே இல்லை என்ற நிலை உருவாகி உள்ளது.
காய்கறிகளின் விலை உயர்வால் பல வியாபாரிகளே விற்பனை இல்லாமல் தற்காலிகமாக தங்களின் வியாபாரத்தை நிறுத்தி வைத்துள்ளனர். காய்கறிகளை அதிக விலைக்கு கொள்முதல் செய்து, நஷ்டத்திற்கு விற்க வேண்டி உள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.
பி.மரகதம், தேனி: ஒரு ரூபாய்க்கு அரிசி வாங்கி, நூறு ரூபாய் செலவழித்து குழம்பு வைக்க வேண்டி உள்ளது. இதனால் ஒரு நேரம் மட்டும் குழம்பு வைக்கிறோம். இரவில் சாதாரணமாக

ஏதாவது வைத்து சாப்பிட்டு நேரத்தை கடத்தி விடுவோம். இந்த விலை உயர்வினை தாங்கும் தகுதி அரசு ஊழியர்களுக்கும், பணக்காரர்களுக்கு மட்டுமே உண்டு. சாதாரண பொதுமக்கள் கடும் நெருக்கடியில் தவிக்கின்றனர். பல காய்கறிகளை பார்த்து விட்டு திரும்ப வந்து விட வேண்டியது தான்.

ஆர்.செண்பகவள்ளி, போடி: தக்காளி கிலோ 40 ரூபாய், சின்னவெங்காயம் 40 ரூபாய், கத்தரி 50 ரூபாய், முருங்கைக்காய் ஒன்று 15 ரூபாய் என, வரலாறு காணாத வகையில் காய்கறிகள் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது நடுத்தர மக்களை பெரிதும் பாதித்துள்ளது. இது மட்டுமின்றி அத்தியாவசிய பொருட்களான சோப்பு, மஞ்சள் போன்றவை கடந்த மூன்று மாதங்களில் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. வெங்காயம் என்றாலே கண்களில் கண்ணீர் தான் வருகிறது. இப்படி விலை அதிகரித்து கொண்டே போனால் ஏழைமக்கள் காய்கறிகளை வாங்கி சாப்பிடுவதற்கு பதிலாக இலைதழைகளை சமைத்து சாப்பிடும் நிலை ஏற்பட்டு விடும் போலிருக்கிறது.

கே.பரமேஸ்வரி, சக்கம்பட்டி: அன்றாடம் ஏறி வரும் காய்கறி விலை உயர்வால் தினக்கூலிகள் குடும்ப செலவுகளை சமாளிக்க முடியவில்லை. இப்படி அன்றாடம் உணவுக்கு பயன்படும் காய்கறிகள், பருப்பு உள்ளிட்ட, மசாலா பொருட்கள் ஒவ்வொன்றும் விலை ஏறிக்கொண்டே செல்கிறது.

கிடைக்கும் கூலியோ அதே அளவில் இருப்பதால் தேவைகளை குறைத்துக்கொள்ள வேண்டி உள்ளது. இதனால் குழந்தைகளுக்கு சத்தான காய்கறி, பருப்பு கலந்த உணவுகளை தர முடியவில்லை. குழந்தைகள் வளர்ச்சி பாதிக்கிறது. பெரியவர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் உணவில் குறைந்து விடுகிறது.

ஏ.கவுரி, நாகம்பட்டி: விலைவாசி உயர்வு நடுத்தர மக்களை மிகக்கடுமையாக பாதித்துள்ளது. குறிப்பாக காய்கனிகளின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. விண்ணை முட்டும் விலை உயர்வால் காய்கறிகளை சாப்பிடும் ஆசையே இல்லாமல் போய்விட்டது. சந்தையில் காய்கனி விலையை கேட்டாலே தலை சுற்றுகிறது. முன்பெல்லாம் 150 ரூபாய்க்கு காய்கனி வாங்கினால் ஒரு வாரத்திற்கு பயன்படுத்தலாம். ஆனால் தற்போது 600 ரூபாய்க்கு அதே காய்கனிகளை வாங்கவேண்டி உள்ளது.

முருகேஸ்வரி, தேனி: தற்போது காய்கறி விற்கும் விலையில் பெற்றோர், இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு தினமும் சமையல் அறைக்கு மட்டும் 200 ரூபாய் செலவாகிறது. சமையல் செலவுக்கு மட்டும் ஆறாயிரம் ரூபாய் இல்லாமல் ஒரு மாதத்தை கடத்த முடியாது. எங்கள் வீட்டில் பல நாட்கள் ரசம், துவையல் வைத்து சாப்பிடுகிறோம். இதற்கே ஒரு நேரத்திற்கு 20 ரூபாய் செலவாகிறது. இப்படி அதிகரிக்கும் செலவுகளை பார்த்தால் தமிழகத்தில் பட்டினிச்சாவு மீண்டும் தொடங்கி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அரசு உடனடியாக விழித்துக் கொள்வது நல்லது.

விலைவாசி உயர்வால் எந்த உணவுப் பொருளைத் தொட்டாலும் "சுடுகிறது'. பிடித்த காய்கறி, பிடித்த குழம்பு, பிடித்த டிபன் என்றெல்லாம் பார்த்து, பார்த்து சமையல் செய்ய முடியாது போலிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்காகவே, சிக்கனமாக சமையல் செய்ய சில "டிப்ஸ்'கள்:

* தேங்காயை கிலோ அளவில் தராசில் தூக்கி வாங்க வேண்டிய நிலைமை உருவாகி விட்டது. இதனை சமையலில் தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம். இது உடலுக்கும் நல்லது.

* காய்கறிகளுக்குப் பதில், நிறைய கீரை பயன்படுத்தலாம். பொறியலுக்கு மட்டுமல்லாமல், கீரையில் சாம்பார் வைத்தால், "சூப்பர்' சுவையாக இருக்கும்.

* தக்காளிக்குப் பதில் புளியை பயன்படுத்தலாம்.

* விலை அதிகம் என்பதால், துவரம் பருப்பு, பாசிப் பருப்புக்குப் பதில், காய வைக்கப்பட்டு பாக்கெட்டுகளில் விற்கப்படும் மொச்சை, பட்டாணி, சோயா பீன்ஸ் போன்றவற்றை அவ்வப்போது, முதல் நாளே ஊற வைத்து சாம்பார் அல்லது குழம்பு வைக்கலாம். இவற்றை, சிறிது அளவு ஊற வைத்தாலே, நிறைய பருப்பு கிடைக்கும்.

* இட்லி மாவு தயாரிக்க, அரிசிக்குப் பதில் குருணை அரிசியைப் பயன்படுத்தலாம். இது முழு அரிசி விலையை விட, பெருமளவு குறையும்.

* மிளகாய் வற்றலுக்குப் பதில் பச்சை மிளகாயை பயன்படுத்தலாம். வற்றலை விட, பச்சை மிளகாயை குறைவாக பயன்படுத்தினால் போதும்.

* சிலிண்டர் விலை உயரப் போவதால், காஸ் ஸ்டவ்வை "சிம்'மிலேயே வைத்து பயன்படுத்துங்கள்.

* அடுப்பில் குக்கரை வைக்கும்போது, அரிசியுடன் முடிந்த அளவு, பருப்பு, காய்கறிகளையும் சேர்த்து வேக வையுங்கள்.

* மறுநாள் என்ன சமையல் செய்யலாம் என முதல் நாளே திட்டமிட்டு, அதற்குரிய பொருட்களை தயார் செய்து வையுங்கள். திடீர் திடீரென முடிவு செய்தால், அடிக்கடி கேஸ் ஸ்டவ்வை பற்ற வைக்க வேண்டி இருக்கும்.

* குக்கரில் போடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே, அரிசியை ஊற வைத்தால், விரைவாக வெந்து விடும்.

* இட்லி, தோசை மாவை அடிக்கடி அரைக்காமல், மொத்தமாக அரைத்து, "பிரிட்ஜில்' வைத்துக் கொள்ளலாம்.

* சாம்பார் அல்லது குழம்பில் புளிப்பு சுவையை ஏற்படுத்த சீசன் நேரங்களில், விலை குறைவாக இருக்கும் மாங்காயை வெட்டிப் போடலாம். இது புளிப்பு சுவையை மட்டுமல்லாது, சாம்பாருக்கு சுவையையும் அதிகரிக்கும்.

* தினமும் காய்கறிகளையே தேடிக்கொண்டிருக்காமல், கருணை, சேனை கிழங்குகளையும் பயன்படுத்தலாம். விலை குறைவாக விற்கும்போது, இவற்றை மொத்தமாக வாங்கி வைத்துக்கொள்ளலாம். எத்தனை மாதங்கள் ஆனாலும் இவை கெடுவதில்லை. இந்த

யோசனைகள் எல்லாம் சரி தான். இவற்றையெல்லாம் விட, அடிக்கடி "விரதம்' இருப்பது, விலைவாசிக்கு ரொம்பவே நல்லது. உடலுக்கும் உகந்தது என்கிறார் ஒரு மதுரைவாசி.
**-நமது நிருபர் குழு-**

**நெல் விலை போகாததால் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,01:10 IST

செஞ்சி:செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு விற்பனைக்கு வந்த, மழையில் சேதமான நெல்லுக்கு வியாபாரிகள் விலை நிர்ணயிக்காமல் போனதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்தனர்.செஞ்சி பகுதியில் இம்மாத துவக்கத்தில் பெய்த கனமழையில் ஏராளமான நெல் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியது. வராக நதி மற்றும் சங்கராபரணி ஆற்றங்கரை ஓரங்களிலும், ஓடைகள் வரும் பகுதியிலும் இருந்த நெல், கரும்பு பயிர்களுக்குள் வெள்ளம் புகுந்தது. இதில் கதிர் முற்றி அறுவடைக்கு தயாராக இருந்த பல ஏக்கர் நிலங்களில் நெல் பயிர்கள் தரையில் படுத்தன. பல இடங்களில் நெல் மணிகள் முளைத்து விட்டன. அறுவடையின் போது இதில் பாதியளவு நெல் கதிர்கள் வயலிலேயே உதிர்ந்தன. மீதம் இருந்த நெல்லும் கருப்பு நிறமாக மாறி இருந்தன.

இது போன்று மழை வெள்ளத்தில் சேதமான நெல் மூட்டைகள் நேற்று முன்தினம் முதல் செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. முதல் நாள் 100 மூட்டை அளவிற்கு வியாபாரிகள் விலை கொடுக்காமல் தவிர்த்தனர். நேற்று விற்பனைக்கு வந்த 474 விவசாயிகளின் நெல்லில் 19 விவசாயிகளின் 350 மூட்டை அளவிலான நெல்லுக்கு வியாபாரிகள் விலை கொடுக்கவில்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றமும், வருத்தமும் அடைந்தனர்.செஞ்சி தாலுகாவில் புலிப்பட்டு, கலத்தம்பட்டு, சொக்கனந்தல், சோகுப்பம், சே.பேட்டை, புத்தகரம், சத்தியமங்கலம், ரெட்டிப்பாளையம், பாக்கம் உட்பட ஏராளமான கிராமங்களில் நெல் பயிர்கள் மழையால் பாதிக்கப்பட்டன. இந்த நெல் பயிர்களில் இப்போது தான் தண்ணீர் வடிந்து விவசாயிகள் அறுவடையை துவங்கி உள்ளனர்.அடுத்த சில நாட்களில் இந்த நெல்லும் விற்பனைக்கு வரும். இவையும் வெள்ளத்தில் சிக்கி தரம் இழந்து இருப்பதால் வியாபாரிகள் விலை கொடுப்பது சந்தேகமே.மழையால் பாதித்த பயிர்களுக்கு இதுவரை அரசு இழப்பீடு தொகை வழங்காத நிலையில், செலவு செய்து அறுவடை செய்த நெல்லையும் விற்பனை செய்ய முடியாத அளவிற்கு தரம் குறைந்திருப்பது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

விலை ஏன் இல்லைகடந்த சில மாதங்களுக்கு செஞ்சி கமிட்டியில் மழையில் நனைந்த நெல் மூட்டைகளுக்கு குறைந்த விலை கொடுக்கப்பட்டது. அப்போது விவசாயிகள் சாலை மறியல்

செய்ததால், தாசில்தார் முன்னிலையில் சமாதான கூட்டம் நடந்தது. இதில் 600 ரூபாய்க்கு குறைவாக நெல்லுக்கு விலை கொடுப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது.
நேற்று விற்பனைக்கு வந்த தரம் குறைந்த நெல்லில் இருந்து பாதியளவு கூட அரிசி கிடைக்காது. அதுவும் பழுப்பு, கருப்பு நிறத்துடன் இருக்கும். பெரும் பகுதியை மாட்டுதீவனமாக மட்டுமே பயன்படுத்த முடியும். இதற்கு விலை கொடுத்தால் பிரச்னை வரும் என்பதால் வியாபாரிகள் விலை நிர்ணயிப்பதை தவிர்த்தனர்.

**உழவர் சந்தைகளில் காய்கறிகளின் விலை கூடுதல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 23,2010,01:48 IST

கடலூர்:காய்கறிகளின் விலை கிடு, கிடுவென உயர்ந்து வரும் நிலையில் கடலூர் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் வெளிச் சந்தையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதால், அரசுக்கு அவப்பெயர் ஏற்படும் நிலை ஏற்பட்டுள் ளது.சிறு விவசாயிகள் தங்கள் நிலங்களில் காய்கறிகளை வியாபாரிகளிடம் குறைந்த அளவுக்கு விற்பனை செய்து வந்தனர். இதனை தடுத்து விவசாயிகள் உரிய வருவாய் ஈட்டும் வகையில் தமிழக அரசு கடந்த 1999ம் ஆண்டு முக்கிய நகரங்களில் உழவர் சந்தையை திறந்தது. அதில் கடலூர் மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் மற்றும் வடலூர் பகுதிகளில் உழவர் சந்தை திறக்கப்பட்டது. பண்ருட்டி மற்றும் சிதம்பரத்தில் சரிவர இயங்க வில்லை.இந்த உழவர் சந்தைகளில் சுற்று வட்டார விவசாயிகள் தங்களது நிலத்தில் அறுவடை செய்யும் காய்கறிகளை நேரடியாக உழவர் சந்தைகளில் அரசு நிர்ணய விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இங்கு நாட்டு காய்கறிகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டதால், மலை காய்கறிகளை வாங்கி மார்க்கெட்டிற்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.இதனைத் தவிர்க்க உழவர் சந்தைகளில் மலை காய்கறிகள் விற்க கூட்டுறவு சங்கங்கள் அல்லது மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் கடைகள் திறக்கப்பட்டது.இங்கு உழவர் சந்தைக்கு விவசாயிகள் கொண்டு வரும் நாட்டு காய்கறிகள் அல்லாத பிற காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது. விலையை அந்தந்த உழவர் சந்தைகளில் உள்ள வேளாண் விற்பனை துறை அலுவலர்கள் நிர்ணயம் செய்து அறிவித்து வருகின்றனர். துவக்கத்தில் வெளி மார்க்கெட் விலையை விட உழவர் சந்தையில் விலை குறைவாக இருந்ததால் உழவர் சந்தைக்கு மக்கள் வருகை அதிகரித்தது.விவசாயிகளுக்காக துவங்கப்பட்ட உழவர் சந்தை காலப்போக்கில் வியாபாரிகளின் கூடமாக மாறியதும் காய்கறிகளின் விலையும் தாறுமாறாக

உயர்த்தி விற்பனை செய்கின்றனர்.Xதற்போது காய்கறிகளின் விலை "ஜெட்' வேகத்தில் உயர்ந்து வரும் நிலையில், உழவர் சந்தைகளில் வெளி மார்க்கெட் விலையை விட கூடுதலாக (விவரம் பெட்டிச் செய்தியில்) விற்பனை செய்யப்படுவதால் மக்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.
குறிப்பாக கடலூர் உழவர் சந்தையில் மலை காய்கறி விற்பனை கடையில் மாவட்டத்தில் எந்த பகுதியிலும் இல்லாத அள விற்கு கடுமையாக உயர்த்தி விற்கப்படுகிறது.அதிகாரிகளிடம் புகார் செய்தால், அந்தக் கடையை ஆளும் கட்சி பிரமுகர் நடத்தி வருவதாக கூறி தங்கள் பொறுப்பை தட்டிக் கழித்து வருகின்றனர். இக்கடையில் விலை பட்டியலே எழுதி வைப்பதில்லை. அவர்கள் சொல்வதுதான் விலை என்ற நிலை உள்ளது.
நேற்று கலெக்டர் உழவர் சந்தையில் ஆய்வு செய்ய வரும் தகவலைத் தொடர்ந்து அவசரமாக விலைப் பட்டியல் எழுதி வைக்கப்பட்டது. அதில் உள்ள விலையோ வெளி மார்க்கெட் விலையை விட கூடுதலாக இருந்தது.இதே நிலை நீடித்தால் மக்களின் கோபம் தமிழக அரசின் மீதுதான் செல்லும் என்பதை உணர்ந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**_விலையை குறைக்க மத்திய அரசு அதிரடி நடவடிக்கை வெங்காயத்துக்கு இறக்குமதி வரி ரத்து தமிழகத்தில் கூட்டுறவு கடைகளில் குறைந்த விலையில் விற்க ஏற்பாடு வெங்காயத்தின் விலையை குறைக்க வெங்காயத்துக்கான இறக்குமதி வரியை ரத்து செய்து மத்திய அரசு உத்தரவிட்டது. தமிழகத்தில் கூட்டுறவு கடைகள் மூலம் குறைந்த விலையில் வெங்காயத்தை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது._**

*புதுடெல்லி, டிச.23–*

*ஏழை மக்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை அனைத்து தரப்பு மக்களும் சமையலுக்கு பயன்படுத்தும் வெங்காயத்தின் விலை கடந்த 3 நாட்களுக்கு முன்பு ராக்கெட் வேகத்தில் உயர்ந்தது.*

*35 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்ற வெங்காயத்தின் விலை 70 ரூபாய் முதல் 85*

ரூபாய் வரை உயர்ந்தது. சில நகரங்களில் 1 கிலோ வெங்காயத்தின் விலை 100 ரூபாய் வரை உயர்ந்தது.

காரணம் என்ன?

“நாட்டிலேயே அதிகமாக வெங்காயம் விலையும் மராட்டியம், குஜராத் மற்றும் சில தென் மாநிலங்களில் பெய்த பலத்த மழை காரணமாக வெங்காய உற்பத்தி குறைந்தது. தொடர் மழை, வெள்ளத்தால் பயிரிடப்பட்டு இருந்த வெங்காயமும் அழுகிப் போனது. இந்த காரணங்களால் சந்தைக்கு வெங்காயம் வரத்து குறைந்தது.

இதனால் மொத்த மண்டி வியாபாரிகளும், வெங்காயம் உற்பத்தி செய்த விவசாயிகளும் அதிக விலையை எதிர்பார்த்து பதுக்கியதால் இந்த விலை ஏற்றம் ஏற்பட்டது’’ என்று சில்லரை வியாபாரிகள் தெரிவித்தனர்.

விலையை குறைக்க நடவடிக்கை

இந்த திடீர் விலை ஏற்றம் காரணமாக வெங்காயத்தின் விலையை குறைக்க மத்திய அரசு அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. முதல் கட்டமாக, அடுத்த மாதம் (ஜனவரி) 15–ந் தேதி வரை இந்தியாவில் இருந்து வெங்காயம் ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டது.

மேலும் விலையை குறைக்க துரித நடவடிக்கைகளை எடுக்கும்படி உணவு மற்றும் விவசாயத்துறை, நுகர்வோர் விவகாரத்துறை ஆகிய அமைச்சகங்களுக்கு பிரதமர் மன்மோகன்சிங் கடிதங்கள் அனுப்பினார்.

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி

இந்த நிலையில், சில தனியார் வியாபாரிகள் பாகிஸ்தானில் இருந்து பஞ்சாப் வழியாக வெங்காயம் இறக்குமதி செய்தனர். நேற்று முன்தினம் ஒரு நாள் மட்டும் 13 லாரிகளில் வெங்காயம் வந்து சேர்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய அரசு வெங்காயம் இறக்குமதி செய்யுமா? என்று உணவு மற்றும் விவசாயத்துறை மந்திரி சரத்பவாரிடம் நிருபர்கள் கேட்டதற்கு, இப்போதைக்கு அப்படி எதுவும் திட்டம் இல்லை என்று கூறினார்.

சுங்கவரி ரத்து

மத்திய அரசு நேரடியாக வெங்காயம் இறக்குமதி செய்யாவிட்டாலும், விலையை குறைக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை நேற்று அதிரடியாக எடுத்தது.

முதல் கட்டமாக, வெங்காயம் ஏற்றுமதிக்கு அடுத்த மாதம் (ஜனவரி) 15–ந் தேதி வரை விதிக்கப்பட்ட தடையை, மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை காலவரையின்றி, அனைத்து வகை வெங்காய ஏற்றுமதிக்கும் தடையை நீடித்து உத்தரவிடப்பட்டது.

அடுத்ததாக, வெளிநாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யும்

வியாபாரிகளுக்கு சலுகை அளிக்க முன்வந்துள்ளது.

வெங்காயம் இறக்குமதி செய்ய தற்போது 5 சதவீதம் சுங்க வரி விதிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் இறக்குமதி எதிர் தீர்வையாக 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்த 2 வரிகளும் மறு உத்தரவு வரும் வரை அடியோடு ரத்து செய்யப்படுவதாகவும் மத்திய அரசின் நிதித்துறை செயலாளர் அசோக் சாவ்லா தெரிவித்தார்.

இறக்குமதிக்கு உத்தரவு

வெங்காயம் விலையை குறைக்கும் நடவடிக்கைகளை மந்திரி சபை செயலாளர் கே.எம்.சந்திரசேகரன் நேரடியாக கண்காணித்து வருகிறார். அவர் நேற்று காலையில் வெங்காயம் இறக்குமதியை துரிதப்படுத்தும்படி வர்த்தக இலாகாவை கேட்டுக் கொண்டார்.

அதன்படி, உடனடியாக வெளிநாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய மத்திய அரசின் எம்.எம்.டி.சி, எஸ்.டி.சி, பி.இ.சி. ஆகிய 3 வர்த்தக நிறுவனங்களுக்கு வர்த்தக இலாகா உத்தரவிட்டது.

விலை குறையும்

“உள்நாட்டு வியாபாரிகளின் நலனைப் பாதுகாக்கவும், வெங்காயம் நாடு முழுவதும் தடையின்றி தாராளமாக சப்ளை செய்யப்படும் வகையிலும் மத்திய அரசு ஏற்றுமதிக்கு தடை விதித்தும், இறக்குமதிக்கான சுங்க வரி மற்றும் இறக்குமதி எதிர் தீர்வை ஆகியவற்றை ரத்து செய்தும் இன்று (அதாவது நேற்று) உத்தரவிட்டது. இதனால் வெங்காயத்தின் இறக்குமதி அதிகரிக்கும். இதன் மூலம் வெங்காயத்தின் விலை 1 வாரத்தில் இருந்து 10 நாட்களுக்குள் கணிசமாக குறையும்’’ என்று விவசாயத்துறை செயலாளர் பி.கே.பாசு நம்பிக்கை தெரிவித்தார்.

விலை குறையத்தொடங்கியது

இந்த நிலையில் நாட்டின் பல பகுதிகளில் வெங்காயத்தின் விலை நேற்று ஓரளவு குறைந்தது. சில்லரை விற்பனையில் 80 ரூபாய் வரை விற்ற வெங்காயத்தின் விலை 60 ரூபாயாக குறைந்தது.

மராட்டிய மாநிலம் நாசிக் நகரில் உள்ள இந்தியாவின் மிகப்பெரிய வெங்காய மார்க்கெட்டில் நேற்று மொத்த விலையில் 42 சதவீதம் குறைந்தது. நேற்று முன்தினம் குவிண்டால் 5 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்ற வெங்காயத்தின் விலை 3 ஆயிரத்து 702 ஆக குறைந்தது. இதே மாவட்டத்தில் பிம்பல்கான் மார்க்கெட்டில் நேற்று முன்தினம் குவிண்டால் 5 ஆயிரத்து 411 ரூபாய்க்கு விற்ற வெங்காயத்தின் விலை 3 ஆயிரத்து 134 ஆக குறைந்தது.

டெல்லியில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய காய்கறி மற்றும் பழ மார்க்கெட்டில்

வெங்காயத்தின் விலை 29 சதவீதம் குறைந்தது.

ஆனாலும் சில்லரை மார்க்கெட்டில் கணிசமாக விலை குறைய இன்னும் சில நாட்கள் ஆகும் என்று வர்த்தக நிபுணர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

தமிழக அரசு நடவடிக்கை

தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் வெங்காயம் விற்பதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து, உணவுத்துறை அமைச்சர் எ.வ.வேலு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

கருணாநிதி உத்தரவு

முதல்–அமைச்சர் கருணாநிதி, வெங்காயத்தின் விலையினை கட்டுப்படுத்திட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளார். அதற்கிணங்க, கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக மொத்த விற்பனை விலையிலும், சில்லரை விற்பனை விலையிலும் வெங்காயம் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து வருகின்ற வெங்காயத்தின் அளவினை பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த மூன்று தினங்களாக வரப்பெறும் லாரிகளின் எண்ணிக்கை குறைந்ததால் விலைகள் உயர்ந்தன. மேலும், அகில இந்திய அளவிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்தது.

மேலும், சிங்கப்பூர், மலேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டதால், வெங்காய இருப்பு குறைவு ஏற்பட்டது. எனினும், மத்திய அரசு உடனடியாக வெங்காய விலையை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது.

மலிவு விலையில் விற்க ஏற்பாடு

கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உயர் அலுவலர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு வடஇந்தியாவில் வெங்காய விற்பனை மையங்களுக்கு சென்று கொள்முதல் செய்து லாபநோக்கமின்றி மலிவு விலையில் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் சென்னை மற்றும் மாநிலத்தின் பிற மாவட்ட தலைநகரங்களிலும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது மக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அமுதம்

அங்காடிகள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

இறக்குமதிக்கு உத்தரவு

வெங்காயம் விலையை குறைக்கும் நடவடிக்கைகளை மந்திரி சபை செயலாளர் கே.எம்.சந்திரசேகரன் நேரடியாக கண்காணித்து வருகிறார். அவர் நேற்று காலையில் வெங்காயம் இறக்குமதியை துரிதப்படுத்தும்படி வர்த்தக இலாகாவை கேட்டுக் கொண்டார். அதன்படி, உடனடியாக வெளிநாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய மத்திய அரசின் எம்.எம்.டி.சி, எஸ்.டி.சி, பி.இ.சி. ஆகிய 3 வர்த்தக நிறுவனங்களுக்கு வர்த்தக இலாகா உத்தரவிட்டது.

விலை குறையும்

“உள்நாட்டு வியாபாரிகளின் நலனைப் பாதுகாக்கவும், வெங்காயம் நாடு முழுவதும் தடையின்றி தாராளமாக சப்ளை செய்யப்படும் வகையிலும் மத்திய அரசு ஏற்றுமதிக்கு தடை விதித்தும், இறக்குமதிக்கான சுங்க வரி மற்றும் இறக்குமதி எதிர் தீர்வை ஆகியவற்றை ரத்து செய்தும் இன்று (அதாவது நேற்று) உத்தரவிட்டது. இதனால் வெங்காயத்தின் இறக்குமதி அதிகரிக்கும். இதன் மூலம் வெங்காயத்தின் விலை 1 வாரத்தில் இருந்து 10 நாட்களுக்குள் கணிசமாக குறையும்'' என்று விவசாயத்துறை செயலாளர் பி.கே.பாசு நம்பிக்கை தெரிவித்தார்.

விலை குறையத்தொடங்கியது

இந்த நிலையில் நாட்டின் பல பகுதிகளில் வெங்காயத்தின் விலை நேற்று ஓரளவு குறைந்தது. சில்லரை விற்பனையில் 80 ரூபாய் வரை விற்ற வெங்காயத்தின் விலை 60 ரூபாயாக குறைந்தது. மராட்டிய மாநிலம் நாசிக் நகரில் உள்ள இந்தியாவின் மிகப்பெரிய வெங்காய மார்க்கெட்டில் நேற்று மொத்த விலையில் 42 சதவீதம் குறைந்தது. நேற்று முன்தினம் குவிண்டால் 5 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்ற வெங்காயத்தின் விலை 3 ஆயிரத்து 702 ஆக குறைந்தது. இதே மாவட்டத்தில் பிம்பல்கான் மார்க்கெட்டில் நேற்று முன்தினம் குவிண்டால் 5 ஆயிரத்து 411 ரூபாய்க்கு விற்ற வெங்காயத்தின் விலை 3 ஆயிரத்து 134 ஆக குறைந்தது.

டெல்லியில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய காய்கறி மற்றும் பழ மார்க்கெட்டில் வெங்காயத்தின் விலை 29 சதவீதம் குறைந்தது.

ஆனாலும் சில்லரை மார்க்கெட்டில் கணிசமாக விலை குறைய இன்னும் சில நாட்கள் ஆகும் என்று வர்த்தக நிபுணர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

தமிழக அரசு நடவடிக்கை

தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் வெங்காயம் விற்பதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து, உணவுத்துறை அமைச்சர் எ.வ.வேலு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

கருணாநிதி உத்தரவு

முதல்–அமைச்சர் கருணாநிதி, வெங்காயத்தின் விலையினை கட்டுப்படுத்திட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளார். அதற்கிணங்க, கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக மொத்த விற்பனை விலையிலும், சில்லரை விற்பனை விலையிலும் வெங்காயம் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து வருகின்ற வெங்காயத்தின் அளவினை பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த மூன்று தினங்களாக வரப்பெறும் லாரிகளின் எண்ணிக்கை குறைந்ததால் விலைகள் உயர்ந்தன. மேலும், அகில இந்திய அளவிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்தது.

மேலும், சிங்கப்பூர், மலேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டதால், வெங்காய இருப்பு குறைவு ஏற்பட்டது. எனினும், மத்திய அரசு உடனடியாக வெங்காய விலையை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது.

மலிவு விலையில் விற்க ஏற்பாடு

கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உயர் அலுவலர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு வடஇந்தியாவில் வெங்காய விற்பனை மையங்களுக்கு சென்று கொள்முதல் செய்து லாபநோக்கமின்றி மலிவு விலையில் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் சென்னை மற்றும் மாநிலத்தின் பிற மாவட்ட தலைநகரங்களிலும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது மக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அமுதம் அங்காடிகள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி எதிரொலி: வெங்காயம் விலை கிலோ ரூ.60 ஆக குறைந்தது மேலும் குறைய வாய்ப்பு

சென்னை, டிச.23–

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதை தொடர்ந்து, வெங்காயம் விலை கிலோ ரூ.60 ஆக குறைந்தது. வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் மேலும் விலை குறைய வாய்ப்பு உள்ளது.

வெங்காயம்

வடகிழக்கு பருவமழை தொடங்கியதை தொடர்ந்து, காய்கறி விளைச்சல்

பாதிக்கப்பட்டது. இதனால், விலையும் அதிகரிக்கத் தொடங்கியது. இந்த நிலையில், சபரிமலை சீசன் வேறு வந்ததால், நிறைய பேர் அசைவ உணவை கைவிட்டு, சைவ உணவை நாடத் தொடங்கினார்கள். இதனைத்தொடர்ந்து, காய்கறி விலை மேலும் அதிகரித்தது.

பொதுவாக, மழை காலங்களில் வெங்காயம் அதிகம் அழுகும் என்பதால், உற்பத்தி குறைந்து விலை அதிகரிக்கும். இந்த ஆண்டு உற்பத்தி குறைந்த சமயத்தில், வெங்காயம் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டதால், வரலாறு காணாத அளவுக்கு விலை உயர்ந்தது.

விலை உயர்வு

காய்கறி வரலாற்றிலேயே எந்த காய்கறியும் எட்ட முடியாத அளவுக்கு ஒரு கிலோ வெங்காயம் ரூ.100–ஐ தொட்டது. இதற்கு முன்னர், வாஜ்பாய் பிரதமராக இருந்த நேரத்தில் வெங்காயம் கிலோ ரூ.35 வரை விற்றதுதான் அதிக விலையாக இருந்து வந்தது.

வெங்காயம் விலை உயர்வை தொடர்ந்து, அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கியது. வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டதுடன், பாகிஸ்தானில் இருந்து இறக்குமதியும் செய்யப்பட்டது.

இறக்குமதி

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் மும்பை வழியாக வந்ததால், அவை மராட்டியம் மாநிலத்திலேயே விற்பனை செய்யப்பட்டது. இதனால், மராட்டியத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டது.

கடந்த 2 தினங்களுக்கு முன்பு ஒரு கிலோ வெங்காயம் ரூ.100–க்கு விற்பனையானபோது, சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டுக்கு மராட்டியம், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து 40 லாரிகளில் வெங்காயம் வந்தன.

விலை குறையும்

தற்போது, மராட்டியத்தில் இருந்து கூடுதலாக வெங்காயம் வருவதால், தினமும் சென்னைக்கு 60 லாரிகளில் வெங்காயம் வருகின்றன. வரத்து அதிகரித்துள்ளதை தொடர்ந்து, வெங்காயம் விலையும் குறையத் தொடங்கியுள்ளது.

நேற்று ஒரு கிலோ மராட்டிய வெங்காயம் ரூ.60 ஆகவும், ஆந்திரா, கர்நாடகா வெங்காயம் கிலோ ரூ.55 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. தமிழகத்திற்கு வெங்காய வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் மேலும் விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தேவைப்பாடு அதிகரித்து வருவதால் வரலாறு காணாத அளவிற்கு இயற்கை ரப்பர் விலை உயர்வு



*எஸ் சனந்தகுமார்*

*கொச்சி*

*இயற்கை ரப்பருக்கான தேவைப்பாடு மிகவும் உயர்ந்து வருகிறது. அதேசமயம், உற்பத்தி சரிவடைந்துள்ளது. இதனையடுத்து, ஒரு கிலோ ரப்பர் விலை இவ்வாரத்தில் இதுவரை கண்டிராத வகையில் ரூ.207.50–ஆக உயர்ந்துள்ளது. கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

மோட்டார் வாகனங்கள்

*நாட்டில், மோட்டார் வாகனங்கள் விற்பனையில் ஏற்பட்டு வரும் எழுச்சியால், டயர்களுக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, டயர் தயாரிப்பு நிறுவனங்கள் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன் காரணமாக, இயற்கை ரப்பர் விற்பனை அதிகரித்து வருகிறது.*

*இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், இயற்கை ரப்பர் பயன்பாடு, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 3 சதவீதம் அதிகரித்து 5.20 லட்சம் டன்னிலிருந்து 5.36 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதேசமயம், இதே காலத்தில் உற்பத்தி 9.4 சதவீதம் (4.80 லட்சம் டன்) சரிவடைந்து 4.35 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. ஆக, தேவைப்பாட்டைக் காட்டிலும் உற்பத்தி*

*1.01 லட்சம் டன் குறைவாக உள்ளது.*

*இறக்குமதி*

*சென்ற நிதி ஆண்டிலும் உற்பத்தியைக் காட்டிலும் தேவைப்பாடு 63,315 டன் அதிகமாக இருந்தது. இதனையடுத்து, இந்தியா, வெளிநாடுகளிலிருந்து இயற்கை ரப்பரை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், இதன் இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 133 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*உற்பத்தி சரிவு*

*உலக அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் ஏழு நாடுகளில் உற்பத்தி சரிவடைந்துள்ளது. சர்வதேச உற்பத்தியில் இந்நாடுகளின் பங்களிப்பு 93 சதவீதமாக உள்ளது. குறிப்பாக, முதலிடத்தில் உள்ள தாய்லாந்தில் கடும் மழை காரணமாக ரப்பர் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, சர்வதேச சந்தைகளில் ஒரு கிலோ ரப்பர் விலை வரலாறு காணாத வகையில் ரூ.220.60–ஆக உயர்ந்துள்ளது. உள்நாட்டு விலையுடன் ஒப்பிடும்போது, இது ரூ.13 அதிகமாகும். எனவே, வெளிநாடுகளிலிருந்து ரப்பரை இறக்குமதி செய்ய முடியாத நிலை உருவாகி உள்ளது என்று மோட்டார் வாகன டயர் தயாரிப்பு நிறுவனங்கள் சங்கத்தின் தலைமை இயக்குனர் ராஜிவ் புத்தராஜா தெரிவித்தார். ரப்பர் இறக்குமதி மீது விதிக்கப்படும் வரியை குறைக்க வேண்டும் என்று இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.*

## கையில் கரும்புடன் விவசாயிகள் மறியல் போராட்டம் சென்னையில் நடந்தது

*சென்னை, டிச.23–*

*ஒரு டன் கரும்புக்கு ரூ.3 ஆயிரம் விலை கொடுக்க வேண்டும், கூட்டுறவு–பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை பாதுகாத்திட வேண்டும், தனியார் சர்க்கரை ஆலைகளின் மோசடிகளை கட்டுப்படுத்திட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மெமோரியல்ஹால் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் கே.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் பி.சண்முகம் முன்னிலை வகித்தார்.*

*தமிழக விவசாயிகள் சங்க தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் என்.பழனிசாமி உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.*

*பின்னர் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கையில் கரும்புகளை ஏந்தி கோஷம் எழுப்பினர். பின்னர் அனைவரும் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். இதை தொடர்ந்து போலீசார் அவர்களை கைது செய்து சமூக நலக்கூடத்திற்கு கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர். முன்னதாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் பாலகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறும்போது, 'கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை அரசு ஏற்று உரிய முடிவை அறிவிக்க வேண்டும். இல்லையென்றால் அடுத்த கட்டமாக பெரிய அளவில் போராட்டத்தை நடத்துவோம்' என்றார்.*

## நெல்லை அருகே பரபரப்பு பாசன குளத்துக்கு தண்ணீர் கேட்டு குளத்தில் குடியேறிய, கிராம மக்கள் மாற்று கால்வாய் அமைக்க கோரிக்கை

*நெல்லை, டிச.23–*

*பாசன குளத்துக்கு தண்ணீர் கேட்டும், மாற்றுக் கால்வாய் அமைக்க கோரியும் கிராம மக்கள் வறண்ட குளத்தில் போய் குடியேறி போராட்டம் நடத்தினர்.*

*பள்ளமடை குளம்*

*நெல்லை மாவட்டம் மானூர் அருகே உள்ளது, பள்ளமடை குளம். சுமார் 400 ஏக்கர் பரப்பளவு கொண்டது, சிற்றாற்றில் இருந்து 30 கிலோ மீட்டர் நீள கால்வாய் மூலமாக இந்த குளத்துக்கு தண்ணீர் வரவேண்டும். இடையில் உள்ள 18 குளங்கள் நிரம்பிய பின்பு பள்ளமடை குளம் பெருகும் நிலை உள்ளது. பருவமழை குறைந்து வரும் இந்த காலத்தில் இடைப்பட்ட 18 குளங்கள் பெருகுவதற்குள்ளாகவே பருவமழையும் ஓய்ந்து விடுகிறது.*

*மேலும் சிற்றாற்றின் கிளை நதிகளான அனுமன் நதி, கருப்பாநதி ஆகியவற்றில் அணைகள் கட்டப்பட்டு விட்டதால் பள்ளமடை மற்றும் மானூர் குளங்களுக்கான கால்வாய்களில் நீர் ஆதாரம் முற்றிலும் முடங்கிபோய் விட்டது. இந்த ஆண்டு பள்ளமடை மற்றும் மானூர் குளங்களுக்கு தண்ணீர் வரவில்லை. இதனால் மழையை நம்பி கையில் இருந்த பணத்தை வைத்து வயலை நட்ட விவசாயிகள் வறட்சியிலும், வறுமையிலும் வாடுகின்றனர்.*

*மாற்று கால்வாய்*

*எனவே பள்ளமடை குளத்துக்கு ஓர் மாற்று நீர் ஆதார கால்வாய் அவசியம். தாமிரபரணியின் உபநதியான கடனாநதியில் உள்ள கடைசி தடுப்பணையான*

காங்கேயன் கால்வாயில் பாப்பாக்குடியில் இருந்து வடகிழக்கே உள்ள மானூர் மற்றும் பள்ளமடை குளங்கள் பயன்பெறும் வகையில் ஒரு மாற்று நீர் ஆதார கால்வாய் வெட்டலாம்.

இதன்மூலம் இந்த கால்வாய் வழியே மழைக்கால வெள்ள உபரிநீரை பெற்று இந்த பள்ளமடை மற்றும் மானூர் குள விவசாயிகள் பயன்பெற செய்யலாம்.

இந்த மாற்று நீராதார கால்வாய் பள்ளமடை குளத்துக்கு வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியே விவசாயிகள் பள்ளமடை குளத்தில் குடியேறும் போராட்டத்தை நடத்தினர்.

குளத்தில் குடியேறினர்

இதில், ஊர் நாட்டாண்மை காஞ்சானம் தலைமையில் 500 பேர் வறண்டு கிடக்கும் பள்ளமடை குளத்துக்கு சென்று குடியேறினார்கள். டிராக்டர், ஆட்டோக்களை குளத்துக்கு கொண்டு வந்தனர். பெண்கள் அங்கேயே சமையல் செய்தனர். அவர்களின் கோரிக்கைகளை ஆதரித்து பல்வேறு அரசியல் கட்சியினர் பேசினார்கள்.

துணை தாசில்தார் செல்வகுமார் குளத்தில் குடியேறி இருக்கும் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த விஷயத்தில் நீங்கள் எதுவும் செய்ய முடியாது. எனவே தாசில்தார் மூலம் மாவட்ட கலெக்டருக்கு தகவல் கொடுங்கள் என்று பொதுக்கள் கூறிவிட்டு, தொடர்ந்து குளத்திலேயே தங்கி விட்டனர்.



# வேளாண்மை செய்திகள்



## அதிக வருமானம் தரும் 'சீமை வாத்து வளர்ப்பு'

இந்தியாவில் உள்ள பல்வேறு கிராமப்புற விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக வாத்து வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். மொத்த கோழி இனங்களில் 10 சதவீதம் வாத்துகள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில் வாத்துகள் பங்களிப்பு 6 முதல் 7 சதவீதமாக உள்ளன. இதன்மூலம் ஆண்டுக்கு 100 முதல் 150 முட்டைகளை பெற முடியும்.

### சீமை வாத்துகள்

வாத்துகளில் முக்கிய இனமாக கருதப்படுவது சீமை வாத்துகள். அவை டொலூஸ், எம்டன், சைனீஸ், கனேடியன், ஆப்பிரிக்கன், எகிப்தியன் ஆகிய 6 வகைகள் உள்ளன. கோழி முட்டை எடையுடன் ஒப்பிடும் போது வாத்து முட்டை கூடுதல் எடை கொண்டது.

9 மாதத்தில் 7 முதல் 9 கிலோ வரை உடல் எடை அதிகரிக்கும் தன்மை கொண்டது. இந்தவகை வாத்துகள் இறைச்சிக்காகவும், அழகுக்காகவும், தரைகளை பராமரிக்கும் வகைகள் களைகளை அகற்றவும் வளர்க்கப்படுகின்றன. வாத்துகளை அதிக குளிர், அதிக வெப்பம், அதிக காற்று இல்லாதவாறு கொட்டகைகள் அமைத்து வளர்க்க வேண்டும்.

### குளம் குட்டை

ஆண் வாத்து சராசரியாக 7 கிலோ உடல் எடையும், பெண் வாத்து 6 கிலோ உடல் எடையும் கொண்டது. மற்ற இனங்களை விட சீமை வாத்துகள் முட்டைகளை அடைகாத்து குஞ்சு பொரிக்கும் திறன் கொண்டவை. சீமை வாத்துகளின் முக்கிய உணவு புரதச்சத்து நிறைந்த பசுந்தீவனம் ஆகும். சாதாரணமாக மேய்ச்சலுடன் நாள் ஒன்றுக்கு 100 கிராம் அடர் தீவனம் அளித்தாலே போதுமானது.

அறுவடை செய்த நிலங்களில் வாத்துகளை மேய்க்க கூடாது. ஏனெனில் போதுமான தீவனம் கிடைக்காவிட்டால் முட்டை உற்பத்தி குறைந்துவிடும். வாத்துகளை தாக்கக்கூடிய நோய்களுக்கு தடுப்பூசி போடப்பட வில்லை என்றாலும் முட்டை உற்பத்தி குறைவதோடு, வாத்துகள் இறக்கும் சூழ்நிலையும் ஏற்படும். சீமை வாத்துகளின் இனப்பெருக்கம் பெரும்பாலும் நீருக்குள் நடைபெறும் என்பதால் பண்ணைகளை சுற்றி குளம் குட்டை அமைப்பது அவசியம்.

### அதிக வருமானம்

பெண் வாத்துகள் வைக்கோல்களுக்குள் முட்டையிட்டு அடைகாக்கும். ஆண் வாத்து காவல் காக்கும். 30 நாட்கள் கழித்து குஞ்சு பொறித்தவுடன் முதல் 3 நாட்கள் வரை தீனி எதுவும் சாப்பிடாது. மேலும், வாத்து குஞ்சுகளுக்கு வைட்டமின், தாது உப்புகளின் பற்றாக்குறை நோய்கள் அதிகமாக காணப்படும். அதற்கு செறிவூட்டப்பட்ட தீவனத்தினை அளிக்க வேண்டும்.

வாத்துகளை தாக்கும் முக்கிய நோய் ராணிக்கெட் ஆகும். இந்த நோய் பாதிக்கப்பட்ட வாத்துக்களுக்கு பச்சை மற்றும் வெள்ளை நிற கழிச்சல் ஏற்பட்டு பின்னர் இறந்து விடும். பெண் வாத்துகளுக்கு முட்டை உற்பத்தி குறையும். இதற்கு லசோர்ட்டா என்ற தடுப்பூசி போடுவதன் மூலம் இந்த நோய் ஏற்படாமல் தடுக்க முடியும். சீமை வாத்துகளை வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் அதிக வருமானம் பெற முடியும்.

-அகமது கபீர், வேளாண் ஆலோசகர், திருப்பூர்.

## தென்னங்கன்று நடுவதற்கான குழி அளவு முறை

தென்னங்கன்றை நடுவதற்கான குழி அளவு 2 அடி நீள அகலம் மற்றும் 1½ அடி ஆழம் இருந்தால் போதுமானது. களர் மண் பூமி ஆக இருந்தால் 1 அடி ஆழத்தில் தென்னங்கன்றுகளை நடலாம். இவ்வாறு நட உள்ள குழிகளில் முதலில் ஆற்று மணல் 5–ல் ஒரு பங்கும், நிலத்து மண்ணாக இருந்தால் 2 அல்லது 3 கூடை வைக்க வேண்டும்.

இதே போல் இந்த குழிகளில் தொழு உரம் 10 கிலோ, கல்பவிருட்சா உரம் ½ கிலோ, கரையான் மருந்து 10 கிராம் ஆகியவைகளை நன்கு கலந்து தரை மட்டத்தில் இருந்து 3 அங்குலத்தில் இருந்து குழி தோண்டி தென்னம்பிள்ளையை நடவு செய்ய வேண்டும். இவ்வாறு நடும் போது தேங்காய் பகுதி 9 அங்குலம் மண்ணில் புதைந்து விடும். கன்று பகுதி தரை மட்டத்தில் இருந்து 3 அங்குலத்தில் இருக்கும்.

நட்டவுடன் குழி முழுவதும் நனையும் படி தண்ணீர் ஊற்ற வேண்டும். இந்த குழிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒருநாள் 10 லிட்டர் அளவுக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். தென்னம்பிள்ளை வளர்ந்து நன்கு வேர் விட்டு வளர்ந்த நிலையில் வாரம் தோறும் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

தென்னம்பிள்ளையை நடும் போது உப்பு வைக்கக் கூடாது. அவ்வாறு வைக்கும் போது மண்ணில் உள்ள மண் புழு மற்றும் நுண்ணுயிர்களை இந்த உப்பு கொன்று விடும். மேலும் மண்ணில் உள்ள மண் புழு மலடாகி இதன் பெருக்கம் குறையும். மேலும் குழி அளவு ஆழம் குறைந்து நடுவதால் பண்பட்ட மேல் மண்ணில் தென்னை நடவு குழி அமையும். இதன் வாயிலாக மண்ணில் உள்ள தேவையில்லாத உப்புகளால் மேல் மண் பாழ்படுவது தடுக்கப்படுகிறது.

திருவையாறு 2–ரகம் தென்னை கன்றை 22 அடி இடைவெளியில் செவ்வக நிலப்பரப்பில் ஒரு ஏக்கருக்கு 100 கன்றுகள் வரை நடவு செய்ய முடியும். சென்ட் ஒன்றுக்கு சராசரியாக ஒரு தென்னை கன்று நடலாம். மட்டை நீளம் கொண்ட நெட்டை ரகத்தை விட குட்டையாக இருக்கும் திருவையாறு 2–ரகம் நல்ல மகசூல் தருவதால் அதிக லாபம் கிடைக்கும். இதன் மூலம் ஆண்டு தோறும் 245 முதல் 300 வரை ஒரு மரத்தில் இருந்து காய்கள் கிடைக்கும். தேங்காய் பருப்பின் கனம் ¾ அங்குலம் இருக்கும். ஒரு தேங்காயில் இருந்து 400 மில்லி லிட்டர் வரை இளநீர் கிடைக்கும். தேங்காய் மற்றும் இளநீருக்கு இந்த ரகம் ஏற்றதாகும்.

தகவல்:– வா.செல்வம், தென்னை ஆராய்ச்சியாளர், திருவையாறு.

## விவசாய கேள்வி–பதில்

கேள்வி: நான் காடை வளர்ப்பில் ஈடுபட விரும்புகிறேன். காடை இறைச்சி சத்துள்ளதா? கோழி இறைச்சி அளவுக்கு விற்பனை வாய்ப்புள்ளதா? இளங்குமரன், சூலூர்.

பதில்: உண்மையில் மற்ற இறைச்சிகளுடன் ஒப்பிடும் போது காடை இறைச்சி அதிக மிருதுவானது. சுவையானது. கோழி இறைச்சி போல் காடையையும் பல விதமான வகைகளில் சமைக்க முடியும். காடை இறைச்சியில் கொழுப்புச்சத்து வெறும் 3.65 சதவீதம் அளவு தான் இருக்கிறது. இதனால் இதய நோயாளிகள் கூட இந்த இறைச்சியை உண்ண முடியும். புரதச்சத்து 20.5 சதம் உள்ளதால் கர்ப்பிணிகள் சாப்பிடலாம். குழந்தைகளின் மூளை வளர்ச்சி மற்றும் உடல் வலுவுக்கு தேவையான சத்துக்கள் ஏராளமாக உள்ளன. குறிப்பாக காடை இறைச்சியில் பாஸ்போலிபிட் என்னும் சத்து அதிகம் உள்ளதால் கொலஸ்டிரால் பிரச்சினைகள் ஏற்படாது.

காடையை மிகவும் சிறிய இடத்தில் கூட வளர்க்கலாம். தற்போது மதுரை சந்தையில் சுமார் 100 கிராம் இருக்கும் ஒரு காடை குஞ்சு 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நீங்கள் விற்பனையில் இறங்கும் தருவாயில் காடை இறைச்சியின் நன்மைகளையும், அவற்றை வித்தியாசமாக சமைக்கும் முறைகளையும் கால்நடை துறை வல்லுநர்களிடம் கேட்டு அதை பிட்நோட்டீஸ் வடிவில் அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகிக்கலாம். இதனால் உங்கள் விற்பனையை குறுகிய காலத்தில் பெருக்க முடியும்.

கேள்வி: கரும்பு சாகுபடியிலும் 'செம்மை கரும்பு சாகுபடி' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சொல்கிறார்கள். இது பற்றி விளக்க முடியுமா? பொன்னையா, கு.வடமதுரை.

பதில்: நெல்லில் செம்மை நெல் சாகுபடி போல் தற்போது கரும்பிலும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதில் முழுக்கரும்பை நடவு செய்வதற்கு பதிலாக அதன் மொட்டை மட்டும் பிரித்து எடுத்து, விதை நேர்த்தி செய்து 5 நாட்கள் வைத்திருந்து முளைப்பு கட்டுகிறார்கள். பின்னர் அதிலிருந்து பிரித்து பிளாஸ்டிக் கவரில் போட்டு, டிரேயில் வைத்து வளர்க்கப்படுகிறது. இப்படி வளர்க்கப்படும் கரும்பை 5 அடி நீளம், 2 அடி அகல நிலத்தில் நட்டு வளர்க்கப்படும். இந்த முறையில் பயிரிடும் போது ஒரு முளையில் 25 கிளைகள் வரும். இந்த முறையில் ஒரு ஏக்கருக்கு கரும்பு பயிரிட 5 ஆயிரம் மொட்டுக்கள் இருந்தால் போதும். ஆனால் வழக்கமான கரும்பு சாகுபடியில் ஏக்கருக்கு 3 முதல் 4 டன் கரும்பு விதைகள் தேவைப்படும். இந்த கரும்பு சாகுபடிக்கு சொட்டு நீர்ப்பாசன மானியமாக 65 சதவீதம் வரை அரசு மானியம் கிடைக்கிறது. சாகுபடி போல் தற்போது கரும்பிலும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு, தினத்தந்தி,**
**கோவை–18**

